விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 06 செவ்வாய்க்கிழமை (18.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 61

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## ஆயுதப் படையினரின் அடாவடித்தனத்திற்கு எதிர்ப்பு

# வடக்குக் கிழக்கு எங்கும் நாளை கறுப்புப் பட்டிப் போராட்டம்!

### முழு அளவில் நடத்த பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

அரசு புலிகள் உடன்பாட்டை மீறி சமாதான முன்னெடுப்புக்களை குழப்பும் சிறிலங்கா ஆயுதப் படையினரின் யுத்த நிறுத்த மீறல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்குக் கிழக்கில்- தமிழர் தாயகப் பகுதிகளில் முழு அளவில் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டம் ஒன்றினை நடத்த பொது அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளன. இப் போராட்டம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கால் நூற்றாண்டு கால யுத்தத்திற்கு முடிவு கட்டி நிரந்தர அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசு-விடுதலைப் புலிகள் இடையே புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டது. ஆனால் ஆயுதப் படையினர் சமாதானத்தைக் குழப்பி மீண்டும் ஒரு யுத்தத்தை வலிந்து இழுக்க முயற்சி செய்கின்றனர். இதனை நாம் அனுமதிக்க முடியாது. ஆதலால் சமாதானத்தைக் குழப்பி மீண்டுமொரு போர் முனையைத் திறக்க முற்படும் ஆயுதப் படையினரின் அடாவடித்தனங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மானிப்பாயில் பெண் போராளிகள், பொதுமக்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் இந்தக் கறுப்புப் பட்டிப் போராட்டம் நடத்தப் படுகிறது. எனவே நாளை புதன் கிழமை மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படையாமலும், நாளாந்தப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாமலும் கறுப்புப்பட்டிப் போராட்டம் நடைபெறவுள்ளது.

ஆகவே பள்ளி செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சார் அமைப்புக்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், தொழில்துறை மற்றும் தனியார் வர்த்தக நிறுவனங்களின் பணியாளர்கள், உரிமையாளர்கள், போக்குவரத்துச் சபை ஊழியர்கள், தனியார் போக்குவரத்து சிற்றூர்திகளின் உரிமையா

(10ம் பக்கம் பார்க்க)

## கொலை அச்சுறுத்தல் இருந்ததால்

# அனுருத்தவின் பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவிட்டேன்

### உடத்தலவின்ன படுகொலை வழக்கில் இராணுவத் தளபதி பலகல்ல சாட்சி

(கொழும்பு)



**முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தைக்கு விடுதலைப் புலி'கள் கொலைப் பயமுறுத்தல் விடுத்திருந்தமையினால் அவரின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்குத் தான் உத்தரவிட்டிருந்ததாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.**

உடத்தலவின்ன படுகொலை தொடர்பாக ட்ரயல் அற்பார் முறையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில நடைபெற்றுவரும் வழக்கு விசாரணையின் போது இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் லயனல் பலகல்ல நேற்று சாட்சியமளித்தார்.

இராணுவத் தளபதி தொடர்ந்து சாட்சியம் அளிக்கையில்;

முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு (10ம்பக்கம் பார்க்க)



## புனர்வாழ்வு அமைச்சின் உப அலுவலகம் யாழில் இயங்கும்

### அமைச்சர் ஜயலத் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சு உப அலுவலகம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்குப் புனர்வாழ்வு மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் றான் பங்களாவில் வலம்புரிக்கு வழங்கிய விஷேட பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடபகுதியின் புனர்வாழ்வு

(10ம் பக்கம் பார்க்க)

## இராஜினாமாவை வாபஸ் பெற உறுப்பினர்கள் சிலர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை உறுப்பினர்களில் ஒருசிலர் தமது இராஜினாமாவை வாபஸ் பெறும் வகையில் பதவி விலகல் கடிதங்களை மீளப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

கடந்த 13ம் திகதி யாழ்.மாநகர சபை முதல்வர் உட்பட உறுப்பினர்கள் அனைவரும் யாழ்.பொது நூலக திறப்பு விழா சர்ச்சை காரணமாக பதவி விலகுவதாக அறிவித்திருந்தனர்.

இதனையடுத்து தற்பொழுது மாநகர சபை நிர்வாகம் விஷேட ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

மாநகர சபையின் பதவிக்காலம் தேர்தல் நடத்தப்படாமல் நீடிக்கப்படும் என்ற செய்திகள் அடிபட்ட தொடங்கிதை அடுத்தே ஒரு சில உறுப்பினர்கள் தமது பதவி விலகல் கடிதத்தை மீளப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயம் குறித்து சில மாநகர சபை உறுப்பினர்கள் மாநகர சபை ஆணையாளருடன் தொடர்பு கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## அழுகிய நிலையில் சாரதியின் சடலம்

### செட்டிகுளம் வீதியில் கிடந்தது

(வவுனியா)

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு வாடகைக்கு அமர்த்திக் கொண்டு வரப்பட்ட வாகன சாரதியின் சடலம் அழுகிய நிலையில் செட்டிகுளம் வீதியில் சூடுவந்த புலவுகாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம் வீதியில் சூடு வந்த புலவு காட்டுப் பகுதியில் அழுகிய நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதாக வவுனியாப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே பதில் நீதிவான் எம்.சிற்றம்பலம் ஸ்தலத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

(10ம் பக்கம் பார்க்க)

## இளம் பெண் வெள்ளைவானில் கடத்தப்பட்டார்

(மன்னார்)

மன்னார் வங்காலைப் பகுதியில் தொண்டர் நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கும் இளம் பெண் ஒருவர் இனம் தெரியாதோரால் வெள்ளைவான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று நடை பெற்று இச் சம்பவத்தை அடுத்து சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பாக மன்னாரில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (வ)

## கலைக்கப்பட்ட சபைகளுக்கு விஷேட ஆணையாளர்கள்!

### இன்று முதல் நியமனம்

(தென்மராட்சி)


யாழ்.மாவட்டத்தில் நேற்று கலைக்கப்பட்ட 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் விஷேட ஆணையாளர்களை வடக்குக் கிழக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி தே.விஜயலட்சுமி இன்று முதல் நியமித்துள்ளார்.


இதன் பிரகாரம் கலைக்கப்பட்ட யாழ்.மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றிய இ.இராமலிங்கம் விஷேட ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இன்று முதல் நியமனம் பெறும் ஏனைய உள்ளூராட்சி சபைகளின் விஷேட ஆணையாளர்களின் விபரம் வருமாறு;

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




# CRICKET WORLD CUP 2003








சதமடித்த வீரர்கள்

# உலகக் கிண்ண கிரிக்கெற் தொடரில் இலங்கை, சிம்பாப்வே அணிகள் முன்னிலையில்

உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகள் ஆரம்பமாகி இன்று பத்தாவது நாளாகும். போட்டிகள் ஆரம்பமாகி இது வரை 13 போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன.

இந் நிலையில் போட்டிகளின் வெற்றிபெற்ற அணிகள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பி பிரிவில் இலங்கை அணியும் ஏ பிரிவில் சிம்பாப்வே அணியும் முன்னிலையில் உள்ளன.

பி பிரிவில் முன்னிலையில் உள்ள இலங்கை அணி, நியூசிலாந்து, பங்களாதேஷ் ஆகிய அணிகளுடன் விளையாடி வெற்றி கொண்டு 8 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் உள்ளது.

நியூசிலாந்து அணி 3 போட்டிகளில் விளையாடி 2 போட்டிகளில் வெற்றி பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது.

இவ் அணி தென்னாபிரிக்கா மேற்கிந்தியத் தீவு ஆகிய இரு அணிகளையும் வெற்றி கொண்டும் இலங்கை அணியுடன் விளையாடி தோல்வி அடைந்தும் உள்ளது.

தென்னாபிரிக்கா அணி விளையாடிய மூன்று போட்டிகளில் கென்யாவுடனான ஒரு போட்டியில் மாத்திரம் வெற்றி பெற்றுள்ளது.

இதேவேளை இலங்கை அணி, கனடா, கென்யா, தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவு அணி ஆகியவற்றுடன் விளையாடவுள்ளது.

எ பிரிவில் சிம்பாப்வே அணி நமீபியாவுடனான போட்டியில் வெற்றி பெற்றும். இங்கிலாந்துடனான போட்டியில் மேலதிக புள்ளிகளைப் பெற்றும் முதலிடத்தில் உள்ளது.

அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான், இந்தியா அணிகளுடனான போட்டியில் வெற்றி பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது.

இதேவேளை இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகள் தலா இரண்டு போட்டிகளில் விளையாடி ஒவ்வொரு போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

## இன்றைய ஆட்டம்


**மேற்கிந்தியத்தீவு**
**எதிர்**
**பங்களாதேஷ்**
(பெனோனி மைதானம்)
2.00 P.M

## 8வது உலகக் கிண்ணத் தொடரில் சதம் அடித்தவர்கள்

| வீரர் | நாடு | எதிர்நாடு | ஓட்டம் |
|---|---|---|---|
| லாரா | மேற்கிந்தியத் தீவு | தென்னாபிரிக்கா | 116 |
| ஜெயசூரியா | இலங்கை | நியூசிலாந்து | 120 |
| டைரிஸ் | நியூசிலாந்து | இலங்கை | 141 |
| சிமென்ஸ் | அவுஸ்திரேலியா | பாகிஸ்தான் | 143 |
| கிப்ஸ் | தென்னாபிரிக்கா | நியூசிலாந்து | 143 |
| பிளெமிங் | நியூசிலாந்து | தென்னாபிரிக்கா | 134 |
| விசார்ட் | சிம்பாப்வே | நமீபியா | 172 |

## உலகக் கிண்ணப் போட்டிகளில் அக்ரத்தின் சாதனைகள்

உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் வசீம் அக்ரம் புதிய சாதனை படைத்துள்ளார்.



தொடர்ந்து 5வது உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றியுள்ள அக்ரம் தனது 34வது பந்தையத்தில் ஆடியுள்ளார்.

உலகக்கிண்ண போட்டியில் இது வரை பாகிஸ்தான் வீரர் வியான்டாட் மற்றும் அவுஸ்திரேலிய வீரரான ஸ்ரிவோக் ஆகியோர் மட்டுமே அதிக பட்சமாக 33 போட்டிகளில் ஆடியிருக்கிறார்கள்.

இந்த சாதனையை அக்ரம் முறையடித்தார். சாதனை படைத்த அக்ரம் கூறுகையில், இந்த சாதனையான ஆட்டம் வலுவான வேறு அணிக்கு எதிராக நடக்கும் என நினைத்தேன் ஆனால் நமீபியாவுக்கு எதிராக அமைந்து விட்டது. இருந்தாலும் சாதனை என்பதால் மகிழ்ச்சியாக இருக்கின்றேன் என்றார்.

ஒரு நாள் போட்டியில் 493 விக்கெட்டுக்கள் சாய்த்துள்ள அக்ரம் டெஸ்ட் போட்டியில் 441 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இருக்கிறார். அது மட்டுமன்றி அக்ரம் நமீபியாவுக்கு எதிராக தனது 352வது ஒரு நாள் போட்டியில் ஆடினார்.

இந்த சாதனையை வேறு எந்த வீரரும் எட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. உலகக் கிண்ண போட்டியில் அதிக விக்கெட்டுக் களை கைப்பற்றிய சாதனையையும் அக்ரம் பெற்றுள்ளார்.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

## வலம்புரி

நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

**போட்டியில் பங்கு பற்றுங்கள் பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்**

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரார் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
**வலம்புரி**
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விடையுடன் தவறாது இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

**உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003**

முழுப்பெயர் : ..........

முகவரி : ..........

தே.அ.அ.இல : ..........

கையொப்பம்: ..........

அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

# உணவு,மனக்கட்டுப்பாடுகளை மேற்கொண்டு குடற்புண்ணைக் குணமாக்கிக் கொள்ளலாம்

**மருத்துவ விளக்கம்**

**டாக்டர் சு.நரேந்திரன்**

ஆங்கிலத்தில்பெப்ரிக் அல்சர் (Pepticulcer) என்று அழைக்கப் படும் குடற்புண் நோய் நாம் அனை வரும் அறிந்த நோய்களில் ஒன்றா கும். வயிற்றுவலி,நெஞ்சில் எரிச் சல், பசியின்மை,வாயுத்தொந்தரவு, உணவின மீது வெறுப்பு ஆகியவை இந்நோயின் குணங்களாகும். வாயு உபத்திரவமாக ஆரம்பித்துக் குடற் புண்ணாக வளர்ந்து இறுதியில் புற்று நோயாகக் கூட இந் நோய் மாறலாம் சோடவைக் குடித்தால் தீர்ந்து விடும் என்பதோ அல்லது அவ்வப்போது ஏதோ சில மாத்திரை களைச சாப்ப்ட்டால் சுகமடைந்து விடலாம் என நினைப்பதோ சரியன்று.

### கட்டுப்பாடு அவசியம்

இந்த நோயைக் குணப்படுத்தக் கட்டுப்பாடான வாழ்க்கைமுறை அவசியம் நாக்குச் சுவையிலே கட்டுப்பாடு நேரம் தவறாது உணவு உட்கொள்ளல் கோபத்தை அடக் குதல் எதிலும் உணர்ச்சி வசப் படாமலிருத்தல் ஆகியவற்றை இந் நோய்க்கு ஆளானவர்கள் கைக் கொள்ள வேண்டும்.உடலுக்குப் பொருந்தாத உணவை நீக்கி உண்பவனுக்குக நோயினால் துன்பம் வராது என்பதைத்திருவள்ளுவர் அழகாக எடுத்துக் கூறுகிறார்.

''மாறுபாடுஇல்லா உண்டி மறுத் துண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு''

அதாவது உடலோடு ஒத்துப் போகாத உணவை ஒருவன் தன் விருப்பத்துக்கு இடங்கொடாது நீக்கி உண்பானாயின் அவனது உடலுக்கு நோய்கள் வராது.

### இரைப்பை குடல் அமைப்பை அறிந்துகொள்க.

நாம்உண்ணும்உணவு நமது உடலின் உள் உறுப்புகளின் பல பகுதிகளில் செரிமானமாகிறது. வாயில் இரைப்பையில் குடல்களில உணவு சீரணமாகிறது. உணவைச சீரணிக்கும் உறுப்புக்களில் இரைப் பைதான் பெரியது. இது மனிதனின் உடல் வாகுக்குததகுந்தபடி பெரிதா கவோ அல்லது சிறியதாகவோ இருக்கும். இதன் கொள்ளவு 1000 மி.லீட்டரிலிருந்து 1500 மி.லீட்டர் வரை ஆகும்.

தொண்டையில் இருந்து கீழே செல்லும் உணவுக்குழாய் இரைப் பையின ஆரம்பத்தில் இணைகிறது. இவ் வாறு இணையும் இடத்தில் பருத்து இருக்கும் இரைப்பை, பின்னர் வடிவத் தில் குறுகி, முன்சிறு குடலுடன் சேர்கிறது.இந்த இடம் பைலோரஸ் வாய்க்கால் என்று அழைக்கப் படுகிறது. பொதுவாக இரைப்பை வயிற்றில் இடது புறம் உள்ள உதர விதானத்திற்குக் கீழே அமைந் திருக்கிறது. உதரவிதானம் என்பது வயிறுக்கும் நெஞ்சுக்கும் இடையேஉள்ள தசை. உதரவிதானம் ஒரு தடுப்புச் சுவர் போல நுரையீரல்,இருதயம் ஆகிய வற்றிலிருந்து இரைப்பை யைப் பிரித்து வைத்து அரணபோல் அமைந்துள்ளது. இது இயற்கையின் அற்புதம்.

இரைப்பை உடலில் எங்கேயிருக் கிறது என்பதைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ப தற்காகவே மேலே ஓரளவு கூறப்பட்டுள் ளது.இரைப்பையின் சுவர் பலவித மான தசைகளால் ஆனது. இதில் நேரான தசைகள் உள. சில பகுதி கள் வளைவான தசைகளால் ஆனவை. மற்றவை குறுக்கு நிலையில் உள்ள தசைகள் குறுக்குத் தசைகள் அதி கம் இரைப்பையின் ஆரம்பத்தில் உள்ளன. வளைவான தசைகள் மிக அதிகமாக பைலோரஸில்' இருக் கின்றது இதன் காரணமாகவே 'பைலோரஸ்' தடித்துக் காணப்படு கிறது. இரைப்பையின் உட்புறத்தில் ஒரு சளிப் படலம் உளளது. இப் படலம் தடித் தும் மேடுபள்ள முமாகவும் வளைவு வளைவாகவும் சிறு சிறு அறைகளா கவும் தேனடை போலக் காணப் படும். இந்தச் சளிப்படலத்தில் தான்'பெட்டிக் செல்களும்' 'பைரைட்டல் செல்களும்' உள்ளன. இந்த 'லெப்டிக் செல்' 'பைரைட்டல் செல்' என்ற இரு வாாத்தைகளைக் கண்டு மிரளத் தேவையில்லை.இந்தச் செல்கள் என்னெனன பணிகளைச செய்கின் றன. என்பதை அறிந்து கொண்டால் போதும்.

### ஹார்மோன் உற்பத்தி

இந்தப் 'பெப்டிக' செல்ஒரு வகை ஹார்மோனை உற்பத்தி செய் கின்றது. அந்தக் ஹார்மோனின் 'பெப்கின்' அதே போல் 'பைரைட்டல செல் ஒரு அமிலத்தை நமது வயிற்றுக்குள்ளே உற்பத்தி செய்கி றது. அந்த அமிலந்தான் நாம் அறிந்த ஹைடிரோ குளோரிக் அமிலம். சாதாரணமாக ஒவவொரு மனிதனுக் கும் ஒரு கோடி 'பைரைட்டல் செல்கள்' இருக்கும். ஆனால் முன் சிறுகுடல்புண்உள்ள வர்களுக்கு இது இருமடங்காக இருக்கும். இந்த செல்களில் ஊறும் அமிலம் இரப்பையை தாக்காமல் இருக்கும் பொருட்டு இரைப்பையில் உள்ள சளிப்படலச் செல்கள் கோழையை உற்பத்தி செய்து சளிப்படலத்தைக் காப்பாற்றுகின்றன.

அமிலத்தைச் சுரக்கும் செல்கள் இரைப்பையில் கழுத்து பகுதியில் அதிகமாகவும் நடுப்பகுதியில் சற்றுக் குறைத்தும் பைலோரிக் பகுதியில் மிகவும் குறைவாகவும் காணப்படு கின்றன. ஆகவே 'பைலோரிக் வாய்க்கால்' பகுதியில் சுரக்கும் நீர் அமிலத்தன்மை குறைந்து காரத் தன்மையாகவே காணப்படு கிறது. இந்த இடத்தில் 'ஜீ (G )என்ற செல்கள் உள்ளன. இந்தச் செல் கள் காஸ்டிரின் என்ற ஹார் மோனை உற்பத்தி செய்கின்றன.இவை குடலில் அமில உற்பத்திக்கு உதவுகின்றன.

### வேகஸ் நரம்பு

சளிப்படலத்தில பின்னல் முறை யில் இரத்தக் குழாய்கள் அமைந் துள்ளன.இந்த இரத்தக் குழாய்கள் வழியாக இருதயத்தில் இருந்து இரைப்பைக்கு இரத்தம் அதிக அளவில் செலுத்தப்படுகிறது.இதன் காரணமாகவே உடல் வளர்ச்சி மாற்ற மும்ஹார்மோன் சுரப்புகளும் இரைப் பையில் திறம்பட நடைபெறுகின் றன. மேலும் இச் சளிப்படலத்தில் உள்ள செல்கள் தினம் தினம் உதிர்ந்து புதியவை உருவாகின் றன.

இரைப்பை வேலை செய்ய 'வேகஸ் என்ற நரம்புமுக்கிய பங்கு வகிக் கிறது. இந்த நரம்பு மூளையிலி ருந்து கீழே இறங்கி இரண்டாகப் பிரிந்து இரைப்பையை அடைகிறது. இந்த நரம்புகள் இரைப்பையை இயக்குவதோடு மட்டுமல்லாமல் பித் தப்பை,கணையம், சிறுகுடல் ,பெருங் குடல் ஆகியவை வேலை செய்ய வும் உதவுகின்றன. வேகஸ் (VeGas) நரம்பு அமில உற்பத்தியில் மிகுந்த பங்குவகிப்பதுடன் 'பெப்சின்' என்ற ஹார்மோன் உற்பத் திக்கும் துணை நிற்கிறது.

---

## சமுர்த்தி வங்கியாளர் பயிற்சி யாழில் இடம் பெறாது

**குருநாகலுக்கு மாற்றம்**

(காரைநகர்)

சமுர்த்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள் ளப்பட விருந்த சமுர்த்தி வங்கியா ளர் பயிற்சி நெறிகள் மற்றும் சமுர்த்தி விடயம் சம்பந்தமான அடிப் படைப் பயிற்சி நெறிகள் உட்பட அனைத்து சமுர்த்தி தொடர்பான பயிற்சி நெறிகளும் குருநாகல் மாவட்டத்திற்கு மாற்றப்படவுள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் யாழ். மாவட்ட சமுர்த்தி வங்கியாளர்களிற்கான பயிற்சி வகுப்புக்கள் யாழ். செயல கத்தில் நடத்தப்பட்டது. இனி மேல் நடைபெறும் பயிற்சிகளும் யாழ். மாவட்டத்திலேயே நடத்தவுள்ளதா கவும் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-246)

## இ.த.ஆ.ச. தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும்

(கொழும்பு)

இலங்கைத் தமிழா் ஆசிரியர் சங்கத் தினால் கடந்த வருடம் சமர்ப்பிக்கப் பட்ட மிக நீண்ட காலத் தேவைகள் சம்பந்தப்பட்ட 15 கோரிக்கைகளை உரிய அமைச்சு நிறைவேற்றா விட் டால், அதற்கெதிராக தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளா் ரி. மகா சிவம் தெரிவித்துள்ளார்.

இதுதொடப்பாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் ,ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஒப்புக் கொள்ளப்பட்டவிடயங்கள் இன்ன மும் நிறை வேற்றப் படவில்லை.

எமது சங்கம் முன்வைத்துள்ள 16 கோரிக்கைகளில் ஒன்று மட்டுமே இது வரை நிறைவேற்றப் பட்டுள்ளது.

இக் கோரிக்கைகள் நிறைவேற்றப் படாதமையினால் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் உள்ள தமிழ் ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுளளார்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை,இதற்கான நடவடிக்கை கள் எதுவும் உரிய அமைச்சினால் எடுக்கப்படாத விடத்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து கிளைச் சங்கங்களும் தயாராக இருக்க வேண் டும் எனவும் இலங்கைத் தமிழா் ஆசிரியர் சங்கத்தின பொதுச் செயலாளா் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-10)

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி கொழும்பில்

(கொழும்பு)

கொழும்பில் அடுத்த மாதம் நடை பெறவுள்ள சர்வதேசவர்த்தகக் கண்காட்சியில் கலந்துகொள்ள 30 நாடுகளைச் சேர்ந்த 250 வர்த் தகர்கள் விருப்பம் தெரிவித்துள் ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இக் கண் காட்சி 5 நாட்கள் தொடர்ந்து நடை பெறவுள்ளது.

இதேவேளை,இது தொடர்பாக இலங்கை வர்த்தக சங்கத்தலை வர் திலக்நெய்ஸா கருத்து வெளியிடு கையில் இவ் வர்த்தக கண்காட்சிக் காக இலங்கை வர இணங்கியுள்ள வெளிநாட்டு வர்த்தகர்கள் இலங்கை யில் தற்போது நடைபெற்று வரும் சமாதானததை ஊக்குவிப்பவர்களா கவும் ஒத்துழைப்பு வழங்குபவர்களா கவும் உள்ளார்கள் என்று தெரிவித் துள்ளார் (உ-10)

## யாழ்மாவட்ட கல்வி அபிவிருத்தி குறித்த கூட்டம

(யாழ்ப்பாணம்)

தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட் டில் யாழ்.மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று யாழ். வலயக் கல்வி அலுவலகத் தில் நடைபெற்றது.

தமிழர் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்கே. சிவா ஜிலிங்கம், மாவைசேனாதிராஜா, அ.வநாயகமூர்த்தி மற்றும் பேராசிரி யர் அ.சண்முகதாஸ், தமிழீழ கல்வி மேம்பாடுப்பேரவைத் துணைப் பொறுபபாளர் அருள் யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப் பாளர் கவியன்பன் மற்றும் கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

குடா நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சி,திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்தியத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைத்தல்,கஷ்டப பிரதேசப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள் ஆகியன குறித்து இதில் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, க.பொ.த (உ/த) பரீட்சை வினாத்தாள்களை யாழ்ப் பாணத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி இதில் கலந்து கொண்ட கூட்டமைப்பு எம்.பிக்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அவர்கள் விரைவில் இதற்கான ஒழுங்குகளைச் செய்வ தெனஉறுதியளித்தனர். (உ-7)

## வருடாந்தம் 80இலட்சம்பேர் காசநோய்க்கு இலக்காகின்றனர்

*வைத்திய அறிக்கைகள் அதிர்ச்சி தகவல்*

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் வருடாந்தம் 80இலட்சம் பேர் காசநோய்க்கு உள ளாகின்றனர். அவர்களில் 20இலட்சம பேர் இறந்துவிடுகின்றனர் என வைத் திய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

அவ் அறிக்கையில் காசநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 7சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

1992ஆம் ஆண்டு தொடக்கம் இந்நோய்க்கு இலக்காவோரின தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது என கண்டி பொது வைத்தியசாலையின் காசநோய் பிரிவுக் குப் பொறுப்பான அதிகாரி தெரிவித் துள்ளார்.

இலங்கையில் இந் நோய்க்கென 33வைத்தியசாலைகளில் தனியான பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

## பொலிஸ் சீருடை அணிந்து கொள்ளைகளில் ஈடுபட்ட குழுவின் தலைவர் கைது

(கொழும்பு)

பொலிஸ் சீருடை அணிந்து கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்த குழுவின் தலைவர் ஒருவரை மீகாவத்தைப்பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இக்குழுவின் சுமார்ஒரு கோடி ரூபாவுக்கு அதிகமான பொருள்களை கொள்ளை யிட்டுள்ளனர் என விசாரணைகள் மூலம் தெரியவந் துள்ளது.

இச் சந்தேக நபரிடம் இருந்து ரீ.56 ரக துப்பாக்கி ஒன்றும் கைத் துப்பா ககி ஒன்றும் தோட்டாக்களும் பொலிஸ் சீருடைகள் என்பனவும் கைப்பற்றப் பட்டுள்ளன.

இக்குழுவின் ஏனைய அங்கத் தவர்களை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர். (க-8)

---

### முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழகத்தின் முன் பள்ளி ஆசிரியர்களுக்கான 3வது செயலமர்வு கடந்த சனிக்கிழமை பாலர் கல்விக்கழகத்தலைவர் எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் முன் பள்ளி ஆசிரியர்களுக்கான நாளாந்த வகுபபு முகாமைத்துவம் பற்றி பயிற் சிகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வின் அடுத்த செயல மர்வு மார்ச் மாதம் 1ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கழக காரியா லயத்தில் நடைபெறவுள்ளது. (க)

### புண்ணிய நாச்சியம்மையார் தினம்

(யாழ்ப்பாணம்)

நாளை காலை 9 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் புண்ணிய நாச்சியம்மையார் தினம் கொண்டாடப்படவுள்ளது.

சைவபரிபாலன சபைத்தலைவர் இ.மகேந்திரன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக தேவார இசை மணி தாவடியூர் கே. எஸ் .ஆர். திருஞான சம்பநதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சைவபரிபாலன சபை நடத்திய பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் இன்றைய தினம் இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

### மாசி அமாவாசையில் கசூர்ணாவில் தீர்த்தம்.

(காரைநகர்)

ஈழத்துச் சிதம்பரத்தின் உற்சவ மூர்த்திகள் கடந்த 15 வருடங் களின் பின்னர் இம்முறை மாசி அமாவாசை தினத்தன்று கசூர்ணா தீர்த்தக் கரைக்கு எழுந்தருளவுள் ளன.

1987 ஆம் ஆண்டு மாசி அமாவாசை தீர்த்தத்திற்கு ஈழத்துச் சிதம்பரத்தின் உற்சவ மூர்த்திகள் கசூர்ணா கடற்கரைக்கு எழுந்தரு ளிய பின்னர் இவ் வருடமே இவ் வாறான ஏற்பாடுகள் நடை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-246)

### 24 மணிநேர மின்சாரம்

(வல்வெட்டித்துறை)

தொண்டைமானாறு ,கெருடாவில் பகுதிகளுக்கு விரைவில் 24 மணித்தியாலங்களும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது

இதற்கான வேலைகள் துரித கதியில் நடை பெற்று வருகின்றன. இதுவரை காலமும் இப் பிரதேசத் திற்கு மாலை 6 முதல் காலை 6மணிவரை மட்டுமே மின்சாரம் வழங் கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக் கது. (உ)

### விண்ணப்பம் கோரல்

(கல்வியங்காடு)

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய அலுவலகத்தில் உயர் தொழில் ஆங்கிலம் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை இம் மாதம 20 ஆம் திகதி வரை யாழ். அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள லாம் என்றும், இப் பாடநெறிக்குரிய தரப்படுத்தல் பரீட்சை மார்ச் மாதம் 2ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-54)

### வயல் விழா

(சிறுப்பிட்டி)

சிறுப்பிட்டி மேற்கு விவசாய சம் மேளன அனுசரணையுடன் ஹட்டன் நஷனல் வங்கி நடத்தும் வயல் விழா இன்று மு.ப.9.30 மணிக்கு சிறுப் பிட்டி மேற்கில் இடம் பெறவுள் ளது. (உ)

### அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 1,2,3, ஆம் அணி மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை காலை 9.00மணிக்கு யாழ். பல்கலைக்கழக உடற் கல்வித் துறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ)

## இன்று ஒரு தகவல்

# எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ண வேண்டும்

ஒரு தந்தை தன்னுடைய பிள்ளையை மிகவும் தைரியசாலியாக வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக அவனை கூப்பிட்டு உட்காரவைத்து உபதேசம் பண்ணினார். ''இதோ பாரப்பா... நான் உன்னைப்போன்று இருக்கின்ற காலத்தில் எதற்கும் பயப்பட மாட்டேன். மிகவும் துணிவுடன் இருப்பேன். ஒரு நாள் ஓர் அப்பாவி எலியைப் பூனையொன்று துரத்திக் கொண்டு ஓடியது. நான் உடனே என்ன செய்தேன் தெரியுமா? அந்தப் பூனையைப் பிடித்தேன். அதன் வாலில் ஒரு பட்டாசு சரத்தைக் கட்டினேன். கொளுத்திவிட்டேன் படபட என்று வெடிக்க ஆரம்பித்தது. அது துள்ளிக் கொண்டு அங்கும், இங்கும் ஓடியிருக்கிறது. ஓட்டமோ வெகு தமாஷ்'' என்றார் அப்பா.

இப்படிச் சொல்லிவிட்டுப் பையனைப் பார்த்து. ''இதைக் கேட்கிறபொழுது உனக்கும் துணிச்சல் வருகிறதா?'' என்று கேட்டார். 'வருகிறது' என்றான் பையன் ''எப்படி'' என்றார் அப்பா. ''எலியை விரட்டியதற்காகப் பூனையின் வாலில் நீங்கள் பட்டாசு கொளுத்தினீர்கள் பூனையை விரட்டியதற்காக உங்கள் கழுத்தில் பட்டாசு சரத்தை மாட்டினால் என்ன என்று தோன்றுகிறது எனக்கு'' என்றான் பையன், பையனுடைய துணிச்சல் அப்பாவையே நடுங்க வைத்துவிட்டது. அதுசரி! ஒரு பிள்ளைக்கு அப்பா இப்படியா உபதேசம் பண்ணுவது? எல்லாரிடமும அன்பாகப் பழகுவது எப்படி என்றல்லவா சொல்லிக் கொடுக்க வேண்டும். பிஞ்சு உள்ளங்களில் நஞ்சைத் தூவலாமா?

ஒரு நாள் விநாயகர் ஒரு பூனையோடு விளையாடிக் கொண்டிருந்தாராம். அப்படி ஆசையாக விளையாடிக் கொண்டிருந்த போது அவருடைய கை நகம் தவறுதலாகப் பூனையினுடைய முகத்திலே பட்டுவிட்டதாம். அது ஒரு சிறு கீறலை உண்டாக்கி விட்டது. அப்பொழுது அவர் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. கொஞ்ச நேரத்திற்குப் பின்னர் விநாயகர் வீட்டுக்குவந்தார். அவரின் அம்மா பார்வதி தேவியைப் பார்த்தார். பார்வதி தேவியின் கன்னத்தில் விரலால் கீறிய ஒரு அடையாளம் இருந்தது. விநாயகருக்கு அதிர்ச்சி! ஆச்சரியம். ''நமது அம்மா இந்த உலகத்துக்கே தாயார். அப்பேர்ப்பட்ட அவரின் முகத்திலேயே கீறலை உண்டாக்கக் கூடியவர்கள் யாராக இருக்க முடியும்?'' என்று யோசித்தார். ''தாயே! உன்னுடைய கன்னத்திலே இந்த வடு எப்படியம்மா ஏற்பட்டது?' என்று கேட்டார்.

''குழந்தாய்! இது நீ செய்த காரியம் தானப்பா! உன் கைநகம் கீறியதாலே ஏற்பட்ட வடுதான் இது' என்றார் அவர். விநாயகர் திடுக்கிட்டுப் போய்விட்டார். ''எப்படியம்மா அது? நான் எந்தக் காலத்திலும் உன்னை அப்படிக் கீறியதாக எனக்கு நினைவு இல்லையே? என்றார். ''இன்று காலையில் ஒரு பூனையைக் கீறியதை நீ மறந்து விட்டாயா?'' என்றார் அவர். விநாயகர் திகைத்துப்போய் நின்றார். பார்வதிதேவி ''இதோ பாரப்பா! இந்த உலகத்திலே உள்ள எல்லா உயிர்களிலும் நான இருக்கிறேன். நான்தான் இந்த உலகமாக ஆகியிருக்கிறேன். ஆசையினால் நீ யாரைத் துன்புறுத்தினாலும், அது உண்மையிலேயே என்னைத் துன்புறுத்தியதாகத்தான் வந்து முடியும்'' என்று சொன்னார். விநாயகரின் மனத்தினுள் ஒரு வெளிச்சம் ஏற்பட்டது. அதன் பின்னர் அவர் யாரையுமே கல்யாணம் பண்ணிக் கொள்ளாததற்கு அதுதான் காரணமாம். இந்த உலகத்தில் எல்லாவற்றையும் அவர் தாயின் வடிவமாகப்பார்க்க ஆரம்பித்து விட்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் இந்தக் கதையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

நபிகள் நாயகம் ஒரு தடவை ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாராம். அப்பொழுது அவரின் உடையின் கீழ்ப் பகுதி தலையில் படிந்து கொண்டிருந்தது. அங்கே விளையாடிக் கொண்டிருந்த ஒரு பூனை அதன் மேல் வந்து படுத்துத் தூங்கிப் போய் விட்டது. தொழுகை செய்ய வேண்டிய நேரம் வந்தது. நபிகள் நாயகம் எழுந்திட நினைத்தார். அப்போது தான் பூனை தன்னுடைய உடையின் மேல் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். பூனையினுடைய தூக்கத்தை அவர் கலைக்கவிரும்பவில்லை. தன் சகோதரியைக் கூப்பிட்டு ஒரு கத்தரிக்கோல் எடுத்துக் கொண்டுவரச் சொன்னார். பூனை படுத்திருந்த உடைப்பகுதியை மட்டும் கத்தரித்து விட்டுவிட்டு அவர் தொழுகைக்குப் போய் விட்டார்.

பிற உயிர்களிடம் எப்படி அன்பு காட்ட வேண்டும் என்பதைப் பெரியவர்கள் எவ்வளவோ விதத்தில் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இருந்தாலும் எத்தனைபேர் மனத்தில் அவை உறைந்திருக்கிறது? நாமும் நம்முடைய உடையின் மீது ஒரு பூனை படுத்திருந்தால் ஒரு கத்தரிக்கோலைத்தான் எடுத்துக் கொண்டு வரச்சொல்லுவோம். துணியை வெட்டுவதற்காகவல்ல, பூனையின் வாலை வெட்டுவதற்காக!

ஒரு ஆள் மிகவும் பிரியமாக ஒரு பூனையை ஆற்றில்குளிப்பாட்டிக் கொண்டிருந்தான். எப்படி? அந்தப் பூனையை ஆற்றுத் தண்ணீரில் அமுக்கி அமுக்கி! அந்த வழியால் போன பெரியவர் ஒருவர் இதைப் பார்த்தார். ''இதோ பாரப்பா! பூனையை இப்படி ஆற்றிலுள்ள தண்ணீரில் அமுக்கிக் குளிப்பாட்டாதே! மூச்சுத் திணறிச் செத்துப் போய்விடும்'' என்று புத்திமதி சொன்னார். 'நீ போய்யா உன் வேலையைப் பார்த்துக் கொண்டு எனக்கு எல்லாம் தெரியும்'' என்றான் இவன். சரி என்று அவர் போய்விட்டார்.

கொஞ்சநேரம் கழித்து அவரே அந்த வழியால் திரும்பி வந்து கொண்டிருந்தார். ஆற்றில் பூனையைக் குளிப்பாட்டியவன் அழுது கொண்டு உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் அந்தப் பூனை செத்துக் கிடந்தது. இதைப்பார்த்தார் பெரியவர், ''நான்தான் அப்போதே சொன்னேனே! அந்தப் பூனையை ஆற்றிலே நனைக்காதே என்று! அதைக் கேட்டிருந்தால் இப்படி ஆகியிருக்குமா?'' என்றார். அந்த ஆள் கோபமாக இவரை முறைத்துப் பார்த்தான்.

''அடபோய்யா! இந்தப் பூனை ஆற்றில் குளித்ததனால் செத்துப் போகவில்லை! குளித்தபின்னர் அதன உடம்பு ஈரமாக இருககிறதே என்று அதைப் பிழிந்தேன். அதனால் தான் இப்படி ஆகிவிட்டது!'' என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அகிம்சை வழிப்போராட்டத்திற்கு தயாராகின்றனர் வேலையற்ற பட்டதாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்தாரிகளாகிய நாம் கடந்த காலங்களில் யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கியும், பல இன்னல்களுக்கு மத்தியிலும் பல்கலைக்கழக படிப்பை முடித்து பட்டம்பெற்று நான்கு வருடங்களுக்கு மேலாக எவ்வித வேலை வாய்ப்பும் இன்றி பரிதவித்திருக்கும் இன்றைய நிலை குறித்து அரசிற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பல தடவை எடுத்துக் கூறிய போதும் எதுவித பலாபலன்களும் ஏற்படவில்லை.

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும், எமது சங்கத்தில சுமார் 2ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக வுள்ளனர். இவர்கள் 1998, 1999, 2000, 2001,2002ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறி இதுவரை எந்தவித வேலைவாய்ப்புகளும் இன்றி இருக்கின்றார்கள்.

ஏனைய மாவட்டத்திலுள்ள பட்டதாரிகள் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் அதிகமாகவுள்ள நிலையில் யாழ். மாவட்ட பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு எதுவும் கிடைக்கக் கூடிய வழிகள் இல்லை என்பது யாவரும் அறிந்ததே.

அரசினால் வழங்கப்படுகின்ற நியமனங்களில் கூட காலதாமதம் ஏற்படுகிறது. அத்துடன், ஏற்கனவே நிரந்தர பட்டதாரி நியமனத்தில் உள்ளவருக்கும் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டதனால் வேலையற்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்பற்று இருக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

எமது பின்வரும் கோரிக்கைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு வேலையற்ற பட்டதாரிகளுக்குச் சாதகமான பதிலைப் பெற்று ஆவன செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

* 15.07.2002, 03.01.2003 வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்தை ஏற்காதவர்களின் நியமனத்தை தாமதமின்றி இரத்துச் செய்து, வேலையற்ற பட்டதாரிகளுக்கு உடனடியாக அந்த நியமனம் வழங்குவதுடன் அனுமதி வழங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனத்தைத் தாமதமின்றி வழங்குமாறு கோரல்.
* நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு இதுவரை வழங்கப்படாத இளைஞர் சேவை உத்தியோகத்தர் வெற்றிடத்தை நிரப்புதல்.
* சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடத்தை வேலையற்ற பட்டதாரிகள் மூலம் நிரப்புதல். அத்துடன் சேவையில் உள்ளவர்களை, ஒப்பந்த அடிப்படையில் சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு கோரப்பட்ட விண்ணப்பத்தை ரத்துச் செய்யுமாறு கோருவதுடன் எதுவித அரசியல் தலையீடுமின்றி சமுர்த்தி முகாமையாளர் வெற்றிடத்தை நிரப்புதல்.
* அரச திணைக்களங்கள், கூட்டுதாபனங்களில் உள்ள பட்டதாரிகள் வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகளின் மூலம் நிரப்புதல்.
* கணக்காய்வு அத்தியட்சகர் போட்டிப் பரீட்சை முடிவை வெளியிட்டு நியமனம் வழங்கல்.
* தருண, அருண பட்டதாரி தொழில் பயிற்சி திட்டத்தை நடைமுறைப் படுத்தல்.

மேற்குறிப்பிட்ட எமது கோரிக்கைகளுக்கு உடனடியாக சாதகமான பதில் தந்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் துயரங்களைத் தீர்த்து விடுவீர்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். எமக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை நீக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றால், நாம்அகிம்சை வழியான போராட்டங்களில் ஈடுபடுவதற்கு தள்ளபபடுவோம என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## நிராயுதபாணிகளான

# பெண் போராளிகள் தாக்கப்பட்டமை அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்

### வட-இலங்கை இடம்பெயர் முஸ்லிம் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிராயுத பாணிகளாக அரசியல் பணிபுரியச் சென்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மனித உரிமைகள், பெண் உரிமை போன்ற அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் மானிப்பாயில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலிற்கு உள்ளாக்கப்பட்ட செயல் மிகக் கொடூரமானதும், வன்மையான கண்டனத்திற்குள்ளாகக கூடிய ஒன்றுமாகும்.

இவ்வாறு வட இலங்கை இடம் பெயர்ந்தோர் முஸ்லிம் ஒன்றியம் மானிப்பாயில் சில தினங்களுக்கு முன இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மீதான தாக்குதல் குறித்து வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரமான அழிவுகளை ஏற்படுத்தி முழு நாட்டையுமே அழிவின் விளிம்பிற்கு அழைத்துச்சென்ற கொடிய யுத்தமானது நிறுத்தப்பட்டு சமாதானத்தின் பெயரால் விடுதலைப் புலிகளின் தலைமையும் ஐக்கிய தேசிய முன்னணி அரசும் ஒன்றிணைந்த சமாதானத் தீர்வும் தன்னாட்சியுடைய சுயநிர்ணயத்திற்குமாக உழைத்துக் கொண்டிருக்கும் வேளையில் இச்சம்பவம் இடம் பெற்றமை துரதிஷ்டவசமானது.

இச்சம்பவத்தில் நியாயம் கேட்டுச சென்ற பொது மக்கள் இராணுவ அதிகாரத்தால் அடக்கப்பட்டதும் அப்படடமான ஜனநாயக விரோதப் போக்கும மனித உரிமை மீறலும் ஆகும்.

இச் செயலானது விடுதலைப் புலிகளின் பொறுமையைச் சோதிக்கும் செயலாகும். இதில் சம்பந்தப் பட்டவர்கள் யாராய் இருப்பினும் கண்டிக்கப்பட வேண்டியவர்களும். தண்டிக்கப்படவேண்டியவர்களும் ஆவர்.

இவ் விடயத்தை இடம் பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் அமைப்பின் சார்பாக மனித உரிமை ஆணைக் குழுவின் நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டுவதுடன், பாராபட்சமற்ற விசாரணை நடாத்தி எதிர்காலத்தில் இவ்வித அடக்கு முறைகள் ஏற்படாதிருப்பதை உறு திப்படுத்துமாறும் எமது அமைப்பு வேண்டிக்கொள்கிறது.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இராசி பலன்

**18.02.2003**

**(மாசி 06, செவ்வாய்)**

| | |
|---|---|
| துதியை | பி.இ 2.47வரை |
| பூரம் | மு.இ 9.16வரை |
| இராகுகாலம் | 3.32 - 5.02 |
| சுபநேரம் | 11.02 - 12.32 |

**சித்தாமிர்தம்**

**மேடம்**
வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, புத்திரரால் கவலை.

**இடபம்**
தன்னம்பிக்கைக் குறைவு, மாதா சுகம், தர்மம், புதியதிருப்பம்.

**மிதுனம்**
கூட்டு முயற்சி, இனிய அனுபவம் அன்னியர் உதவி, காரிய நன்மை.

**கடகம்**
மனக்குழப்பம், மாதர் நட்பு, கௌரவக் குறைவு, காரிய தாமதம்.

**சிங்கம்**
நண்பர்கள் உதவி, சயன சுகம், போசன சுகம், புதிய பொருள் சேர்க்கை.

**கன்னி**
பிதாசிந்தை, வேலைக்கஷ்டம், எதிர்பாராத நன்மை, அலைச்சல்.

**துலாம்**
தொழில் சிந்தை, பெருமையடைதல், மனமகிழ்ச்சி, உறவினர் வருகை.

**விருச்சிகம்**
கடின உழைப்பு, நல்ல செய்தி, முயற்சி பலிதம், பிறர் உதவி.

**தனுசு**
கட்டுப்பாடு. வீண்பயம், சகோதரர் உதவி, முயற்சி தாமதம்.

**மகரம்**
வீண் தொல்லை, போசன நன்மை, பிரயாண பயம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
நல்ல வரவேற்பு, உஷ்ணரோகம், காரிய அனுகூலம், திடீர் பயணம்.

**மீனம்**
சுகவாழ்வு, சத்துரு ஜெயம், உறவினர் சந்திப்பு, சுவாரஸ்யம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# இந்தியா 10கோடி டொலர்களை நன்கொடையாக வழங்கியது

### நிருபன் சென் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் இலங்கைக்கு நன்கொடையாக இந்தியா 10கோடி டொலர்களை வழங்கியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பேராளர் மாநாட்டின் இரண்டாவதுநாள் நிகழ்வுகளில் கலந்து கொண்டு, இந்தியாவின் இலங்கைக்கான தூதுவர் நிருபன் சென் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிகையில், இலங்கை மக்களுக்காக இந்தியா சகலவகையான உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளது.

இந்திய அரசால் வருடமொன்றுக்கு இரண்டாயிரம் இலங்கை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

கல்வி, அபிவிருத்தி போன்ற வற்றுக்கு மட்டுமன்றி இனப் பிரச்சினை மற்றும் அரசியல் விடயங்களிலும், இந்தியா உதவி வழங்கும் எனவும் நிருபன் சென் தெரிவித்துள்ளார். (க-8)

## பஸ்சேவைக் கட்டண அறவீட்டில் புதிய நடைமுறை

(வவுனியா)


வவுனியாவில் இருந்து வெளியூர்களுக்குப் புறப்படும் தனியார் பஸ்களுக்கான சேவைக்கட்டணத்தை நேற்று முதல் தனியார் பஸ்கம்பனிகள் அறவிட ஆரம்பித்துள்ளன.

வவுனியா செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே இந்நடைமுறை நேற்று முதல் அமுலுக்குவந்தது.(உ-10)

# அமெரிக்க அதிபர் புஷ் சமாதான ஆதரவை வெளிப்படுத்தி இலங்கை விஜயம்

## விரைவில் செய்யுமாறு அரசு அழைப்பு

(கொழும்பு)



சமாதான முயற்சிகளுக்கான அமெரிக்காவின் ஆதரவினை

வெளிப்படுத்தும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை இலங்கை வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து அமைச்சர் மிலிந்த மொறகொட கருத்து வெளியிடுகையில்,

அமெரிக்க ஜனாதிபதியுடன் அந்நாட்டு இராஜாங்க அமைச்சர் கொலின் பவலையும் இலங்கை வருமாறு உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு பக்கபலமாக இருந்து வரும் அமெரிக்கா இந்த அழைப்பைத் தட்டிக்கழிக்காது என்று நம்புகின்றோம்.

புஷ்ஷின் வருகை எமது சமாதான ஆர்வத்தை மேலும் உலக மயப்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கூறுகையில்,

எமது நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படும் என்று பலரும் நம்பிக்கை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் உலகத் தலைவர்கள் பலரும் இவ்வாண்டு இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு எண்ணியிருந்த போதிலும் மத்திய கிழக்கு போர் அபாயம் காரணமாக அவரின் விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (உ)

## தொலைபேசி வசதி

(பருத்தித்துறை)

புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளைப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை மேற்கொண்டுள்ளதாக அதன் தலைவர் வீ.எஸ்.ஏகாம்பரநாதன் தெரிவித்துள்ளார். (உ-52)

# சர்ச்சைக்குள்ளாகும் யசூசி அகாஷி ஜனாதிபதி-பிரதமர் பனிப்போர்

(கொழும்பு)

யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கையின் சர்வதேச விவகார ஆலோசகராக நியமிக்கப் பட்டிருக்கவில்லை. ஜனாதி பதியின் கடிதம் தவறான தகவல்களின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளதுஎன்று பரிகாச மாக பிரதமர் விக்கிரமசிங்க ஜனாதிபதி குமாரதுங்காவிற்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி குமாரதுங்காவின் கடிதத்தின் தொனி பற்றி தான் ஆச்சரியமடைந்துள்ளதாக தெரிவித்திருக்கும் பிரதமர், அத்தகைய கடிதமொன்றை எழுதுவதற்கு முன்பு அது தொடர்பான விபரங் களைத் தேடி அறிந்து கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி உணர்ந்திருக்க வில்லையா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே இந்த வகையில் கடிதப் போக்கு வரத்து இடம்பெறுமானால் அது ஜனாதிபதியின் அலுவலகத்தின் கௌரவத்தையே குறைப்பதாகும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த வெள்ளியன்று பிரமர் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, திலக் மாரப்பன ஆகியோர் ஜனாதி பதியைச் சந்தித்து சமாதான நடவடிக்கைகள் பற்றி உரையா டியிருந்தனர்.

அப்போது முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் உடனிருந்தார். அப்போது மிலிந்த மொறகொட பேசியதாக பத்திரிகைகளில் வெளியான செய்திக்கு ஜனாதிபதி அளித்த பதில் பற்றி அமைச்சர் மொறகொட கடும் தொனியில் பதிலளித்தார். ஜனாதிபதி விவாதம் புரிவதற்கு பொருத்தமான குறிப்புக்கள் தேடுவதை விடுத்து தேசிய நலன்கள் பற்றிச் சிந்தித்து பேச வேண்டும் என மொறகொட கேட்டுக்கொண்டார்.

இப்பேச்சுக்களின் பின்னர் ஜனாதிபதி யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியை சந்தித்து உரையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# அரசியல் வழிமுறைகளில் புலிகளை இணைப்பதே அரசின் நோக்கம்

## தெளிவுபடுத்துகின்றார் ஊடகத்துறை அமைச்சர்

(கொழும்பு)

ஜே.வி.பி யினரைப் போன்று தமிழீழ விடுதலைப் புலிகளையும் நாட்டின் பிரதான அரசியல் வழிமுறைகளில் பங்குபற்றச் செய்வதே அரசின நோக்கம் என மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

இங்கினியாகலையில் புதிய தபாலகத்தை நேற்று திறந்து வைத்து பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

படுகொலைகள், கொள்ளைகள் போன்ற தீய செயல்களில் ஜே.வி.பி யினர் ஈடுபட்டிருந்த போதிலும் அந்தக் கட்சியினை நாட்டின் பிரதான அரசியல் வழிமுறைக்கு கொண்டு வந்து தற்போது ஆட்சியில் உள்ள ஐக்கய தேசியக்கட்சியே.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளையும் இவ்வாறான பிரதான அரசியல் வழிமுறைகளுக்குள் சேர்ப்பது கடினமான விடயம் அல்ல.

நாட்டின் தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி யினர் எதிர்ப்பு தெரிவித்து வருவது கவலை தரும் விடயமாகும்.

முன்னைய காலத்தில் ஜே.வி.பி யினர் இந்தியாவை எதிர்த்து வந்தனர். அங்கிருந்து கொண்டுவரப்பட்ட பொருட்களை இந்நாட்டு மக்கள் உபயோகிக்கவும் தடை விதித்திருந்தனர். அவ்வாறு உபயோகித்தவர்கள் இவர்களால் அச்சுறுத்தப்பட்டனர்.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் ஆலோசனை அறிவுரைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஜே.வி.பி யினர் தற்போது கூறிவருவது வேடிக்கையானது என்று குறிப்பிட்டார்.

தற்போதைய சமாதான நடவடிக்கைகளை ஜே.வி.பி யினர் எதிர்த்து வருவதைக் கண்டிக்க நாட்டில் உள்ள அனைத்து மக்களும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (உ-10)


**இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழா 2003**

இடம் : மன்றக் கலாமண்டபம்

காலம் : 14.02.2003 - 23.02.2003 வரை

நிகழ்ச்சி நிரல்

இன்று (18.02.2003) செவ்வாய்கிழமை (5ம் நாள்)

மாலை4.00 மணி முதல் 5.00 மணி வரை

மங்கள இசை

திரு. கே. உதயநாதன் குழுவினர்

மங்கள விளக்கேற்றல்

திரு. ரி. குணசிங்கம்

(கோபிகா ஆடையகம்)

மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை

பாட்டு : பி. கிருபானந்தி வயலின் : எம். ரதீஸ்

மிருதங்கம் :கே. கஜன்

மாலை 5.30 மணி முதல் 6.15 மணி வரை

பாட்டு : கிருபாசக்தி கருணா

வயலின் : பாக்கியலட்சுமி நடராசா மிருதங்கம் : எம். சிதம்பரநாதன

இரவு 6.15 மணி முதல் 7.00 மணி வரை

இசைக்கச்சேரி

பாட்டு :எஸ். உமாரமணசர்மா வயலின் : ஆர். இராதாகிருஷ்ணன்

மிருதங்கம் : கே. கண்ணதாசன் கெஞ்சிரா : கே. அனந்தகோபன்

முகர்சிங் : என். சதீஸ்

இரவு 7.00 மணி முதல் 8.00 மணிவரை

திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் அவர்களின் மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

சட்டநாதர் வீதி நல்லூர். மன்றத்தினர்

(C/5761)




ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து நேற்று யாழ். செயலகத்தில் அமைந்துள்ள அரச தகவல் திணைக்களம் முன்பாக ஊடகவியலாளர்களாலும், பொது அமைப்புக்களாலும் நடத்தப்பட்ட மறியல் போரும், மகஜர் கையளிப்பின் போதும் பிடிக்கப்பட்ட படங்கள். படங்கள்: க.பவன்

# வெளிநாட்டு உருளைக்கிழங்கு தற்போதைக்கு வேண்டாம்

## மாவை எம்.பி. அமைச்சருக்கு வேண்டுகோள்

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்கு செய்கையாளர்களின் நன்மை கருதி வெளிநாட்டிலிருந்து உருளைக்கிழங்கினை யாழ்ப்பாணத்திற்கென இறக்குமதி செய்வதை தற்போதைக்கு நிறுத்தும்படி யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா வர்த்தக நுகர்வோர் அமைச்சரான ரவி கருணாநாயக்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும், யாழ். மாவட்ட விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் ஏனைய விவசாய உற்பத்திப் பொருட்களை சதொச விற்பனை நிலையங்கள் மூலம் தென்பகுதி மக்களுக்கு விற்பனை செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றியும் ஆராய்ந்து அவ்வகையான பொருட்கள் பற்றிய விலை விபரங்களை தமக்கு அனுப்பி வைக்கும்படி அமைச்சர் கேட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டச் சந்தைகளில் இப்போது வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட உருளைக் கிழங்கும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கிழங்கும் விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்படும்

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன்பள்ளி ஆசிரியைகளாகப் பணியாற்றி வரும் 756 பேருக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இம்மாதம் முதல் தலா ஆயிரம் ரூபா மதிப்பூதியம் வழங்கவுள்ளது.

இது பற்றி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சி.விக்னேஸ்வரன் குறிப்பிடுகையில்,

குடாநாட்டில் முன்பள்ளிக் கல்வியை மேம்பாடடையச் செய்யும் பொருட்டு நல்லூர் முத்திரைச் சந்தியில் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுளளது. இத்துறையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் நலன்களைக் கவனிப்பதுடன் அவர்களுக்கான நவீன பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

இங்கு முன்பள்ளி ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்ற 75 சதவீதமானவர்கள் எவ்வித நிதி ஊக்குவிப்புக்களும் அற்ற நிலையிலேயே தமது பணிகளை ஆற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் என தெரிவித்துள்ளார். (க-77)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின்

# இலங்கைப் பிரதிநிதி மட்டுநகர் விஜயம்

(மட்டக்களப்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி ஜோன் ஆர் கூனி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

வட-கிழக்கு மீளாய்வு திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களைப் பார்வையிடவும், எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்வதற்காக இந்த விஜயத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முறக்கட்டான் சேனை இராமகிருஷ்ண மிஷன் பாட சாலை, ஆரம்பப் பாடசாலைக் கட்டடத்தை வைபவரீதியாக திறந்து வைத்த பின்பு,

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசமான வாகரையில் இடம்பெற்ற இரண்டு வைபவங்களிலும் கலந்துகொண்டார்.

யுத்தத்தினால் அழிந்து போன வாகரை வைத்தியசாலையில் புதிய கட்டடத் திற்கான அத்திபாரக்கல் நடும் வைபவம் மற்றும் பனிச்சான் கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கான புதிய கட்டடத் திறப்புவிழா ஆகிய வைபவங்களில் கலந்து கொண்டார். (க)

## பாதுகாப்பு அமைச்சருக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் இன்று

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

இதனையடுத்து ஹஜ் கடமையை நிறைவேற்றுவதன் பொருட்டு மக்கா சென்றிருந்த அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவசரமாக நாடுதிரும்பியுள்ளனர்.



திலக் மாரப்பன

பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், கப்பல் துறைமுக அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் களான ஏ.ஆர்.எவ். காதர் எம்.ஏ.ம.ஃரூப் ஆகியோரே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர். (உ-10)

# மான்கள் மர்ம மரணம்

(சிகிரியா)

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சிகிரியா காட்டுப் பிரதேசத்தில் 14 மான்கள் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

இதனையடுத்து, இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய மான்களை பாதுகாக்கும் பொருட்டு மின்னேரியா சரணாலயத்திற்கு அவற்றை அனுப்பிவைக்கும் நடவடிக்கைகளை வன பரிபால திணைக்களம் மேற்கொண்டுள்ளது. (உ-10)

# இசை விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தினர் வருடாந்த இசை விழாவின் 5ஆம் நாளான இன்று மாலை கே.உதயநாதன் குழுவினரின் மங்கள இசையும், பி.கிருபானந்தி, க.கிருபாசக்தி, எஸ்.உமாரமணசர்மா ஆகியோரின் பாட்டுக் கச்சேரிகளும் திருமதி ஸ்ரீ தேவி கண்ணதாசனின் மாணவிகளின் நாட்டியாஞ்சலி நிகழ்வும இடம்பெறவுள்ளன. (உ-10)

# நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ மீனாட்சி சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக செ.விஜயரட்ணம் செயலாளராக த.ஜீவராஜ், உப தலைவராக சி.பவீந்திரன், உப செயலாளராக திருமதி ச.சித்திரலதா, பொருளாளராக இ.மகிதரன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (உ-10)

# சனசமூக நிலைய திறப்பு விழா

(மீசாலை)

மீசாலை வடக்கு டச்சு வீதியில் அமைந்துள்ள சுடர் ஒளி சனசமூக நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டபின் நிலைய திறப்புவிழா கடந்த சனிக்கிழமை சு.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொடிகாமம் பிரதேசசபை செயலர் ந.பாலச்சந்திரனும், சிறப்பு விருந்தினராக மீசாலை வடக்கு கிராம சேவையாளர் க.சுந்தரராஜாவும் கலந்து கொண்டனர். (க-26)

# ஓடுகள் யாவும் அகற்றப்பட்ட பாடசாலை

(தென்மராட்சி)

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் மறவன் புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தின் கூரைகள் ஓடுகள் யாவும் அகற்றப்பட்ட நிலையில் சுவர்கள் மாத்திரமே மிஞ்சி இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் அங்கு பாதுகாப்புப் படையினருடன் சென்று வந்த அப்பகுதி கிராம சேவையாளர் இத்தகவலைத தெரிவித்துள்ளார். (க-77)

# விளையாட்டுப் போட்டி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய அதிபர் எஸ்.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (உ-126)

# உறுதிப்பூஜை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பத்திமா ஆலயத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி 200க்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு உறுதிப் பூஜை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகள் கலந்து கொள்ளவுள்ளார். (உ-126)

# பாடசாலைகள் தோறும் டெங்கு ஒழிப்புத் திட்டம்

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலும் வலிகாமம் தென்மேற்கு பகுதிகளிலும் உள்ள பாடசாலைகளில் இந்த மாதம் தொடக்கம் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் சிரமதான நிகழ்வுகளை மேற்கொள்ளும்படி மானிப்பாய் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி டாக்கடர் கே.கணேஸ்வரராஜா இப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிற்கு அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் பாடசாலைச் சுற்றாடலில் நுளம்பு பெருகும் இடங்களை இனங்காணல், பாடசாலைச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகளை ஒவ்வோர் பாடசாலைகளிலும் செய்ய வேண்டும் எனவும், இதனை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சுகாதார மன்றம் போன்றவற்றின் வழிகாட்டலில் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் மேலும் அறிவிக்கப் படடுள்ளது. (உ-252)

# இலங்கை தேசிய அணி வெற்றியீட்டியது

(சுண்டுக்குளி)

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட உதைபந்தாட்ட ஆடுகளம் கடந்த 14 ஆம் திகதி தேசிய உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் மணிலால் பெர்னாண்டோவினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிக்கும், இலங்கை தேசிய அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை தேசிய அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக எச.கே.டிலான் பெரேரா, எஸ்.ரி.பிரேமதாஸ, எஸ்.எச்.ஞானசேகரன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப தலைவர் எஸ்.ஆனந்தராஜா, பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி ரந்தெனிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

இம்மைதான மேலதிக செயறபாடுகளுக்கு மணிலால் பெர்னாண்டோ 5 லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை அன்றைய தினம் கையளித்துள்ளார். (உ-110)

# பொலிஸ் வாகனம் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் கடந்த சனியன்று இரவு இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் வாகனம் ஒன்று சேதமடைந்துள்ளது.

இச்சம்பவத்தினால் வாகனத்தில் உறங்கிக் கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அதிர்ச்சியடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூரில் நடைபெற்று வரும் வீரசாகச நிகழ்ச்சி ஒன்றிற்கு பாதுகாப்பு கடமைக்குச் சென்ற பொலிஸ் வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலிற்கு முஸ்லிம் தீவிரவாத குழுக்கள் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

குறிப்பிட்ட வீரசாகச ஏற்பாட்டாளர்களுக்கும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த சில இளைஞர்களுக்கும் முரண்பாடுகள் காணப்பட்டதாகவும்,

இதனைத் தடுக்கும் அல்லது குழப்பும் நோக்கத்துடன் இந்தக் கைக்குண்டு வீச்சுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

இது தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள். சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. (உ )

# தென்னம்பிள்ளைகளை வெளியே கொண்டு செல்லத்தடை

(காரைநகர்)

காரைநகரில் இலவசமாக வழங்கப்படும் தென்னம்பிள்ளைகளை வெளியே கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

காரைநகர் பகுதிக்கென இலவசமாக வழங்கப்பட்ட தென்னம் பிள்ளைகளை காரைநகரில் பயிரிடாது வெளியிடங்களிற்கு கொண்டு சென்று விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டதனாலேயே காரைநகர் இளைஞர் குழு ஒன்றினால் இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதான நுழை வாயிலான வலந்தலைச் சந்திப் பகுதியில் வைத்து இவ்வாறு கொண்டு செல்லப்படும் தென்னம பிள்ளைகள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (உ-246)

## தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும்

# ஆசிரியர் பற்றாக்குறை இவ்வருடத்திற்குள் தீர்க்கப்படும்

## பிரதமர் உறுதியுரை

(கண்டி)

நாட்டில் உள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை இவ்வருடத்திற்குள் நிவர்த்தி செய்யப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதி படத் தெரிவித்துள்ளார்.

கண்டி போகம்பரை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 33 ஆவது வருடாந்த மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் பட்டதாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு உலக வங்கியின் உதவி பெறப்பட்டு அதன் உதவியுடனேயே நடைமுறைப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார். (உ-10)

# ஈராக் பற்றிய அமெரிக்க நிலைப்பாட்டில் தளர்வு!

## நிபந்தனையுடன் புதிய தீர்மானத்திற்கு வரவேற்பு

(வாஷிங்டன்)



ஈராக் மீது போர் தொடுக்க வேண்டாம் என்றும் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கும் படியும் கோரி உலகெங்கும் நடந்துவரும் ஆர்ப்பாட்ட எதிர்ப்புக்களின் காரணமாக அமெரிக்காவின் தீவிரப் போக்கில் சற்றுத் தளர்வு ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஈராக் தொடர்பான இரண்டாவது தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படுவதை அமெரிக்கா நிபந்தனைகளோடு வரவேற்றுள்ளது.

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் தம்மிடமுள்ள பேரழிவு ஆயுதங்களைக் கைவிடச் செய்வதற்கு உறுதியளிக்கும் மேலும் ஒரு தீர்மானத்தை ஐ.நா.பாதுகாப்புப் பேரவையில் நிறைவேற்றுவதற்கான ஆலோசனைகளை அமெரிக்கா தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொன்டொலீஸா றைஸ் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இத்தீர்மானம் இன்னமும் வரைந்து முடிக்கப்படவில்லையென்று கூறிய திருமதி றைஸ் பல்வேறு தரப்புகளோடும், நண்பர்களோடும் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இதேவேளை ஐ.நா பாதுகாப்புப் பேரவை மேலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றுமானால் அதைத் தாம் வரவேற்பதாகவும் ஆனால் ஈராக் ஆயுதக் களைவு செய்ய வேண்டும இல்லையெனில கடும் விளைவுகளை எதிர்நோக்க நேரும் என்று கூறுகின்ற 1441வது தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் விரைவான இராணுவ நடவடிக்கையை அது தடைசெய்வதாய் இருக்கலாகாதென்றும் அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சபையின் தீர்மானம் தாமதிக்கச்செய்யும் ஒரு தந்திரமாக இருப்பதை நாங்கள் விரும்பவில்லையென்று திருமதி றைஸ் கூறினார்.

அது 1441இலக்கத் தீர்மானத்தை உறுதி செய்வதாக இருக்க வேண்டும் .ஏனென்றால் 1441 ஆவது தீர்மானத்தின் படியும் வேறுபல தீர்மானங்களின்படியும் ஈராக் மீது அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எமக்கு சகல அதிகாரங்களுமுண்டு என்று அவர் வலியுறுத்தினார்.

அதேவேளை, உலகெங்கிலும் ஈராக் மீதான அமெரிக்க யுத்தத்திற்கு எதிர்ப்பு அதிகரித்துள்ளதால் இப்பிரச்சினை சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்படுமென நம்புவதாகவும் போர் என்பது இறுதிக்கட்ட நடவடிக்கையாகத் தான் இருக்குமென அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்டபிள்யு புஷ் கருதுவதாக அமெரிக்க குடியரசு மாளிகைத் தகவல் ஒன்று தெரிவித்தது.

இதேவேளை, ஈராக் மீதான கடும் நடவடிக்கையொன்று தனது நிலையை பிரிட்டிஷ் பிரதமர் வலியுறுத்திவருகிறார்.

அத்துடன் சதாம ஹுசைனின ஆதிக்கத்தை அழிப்பது மனித நேயத்தின் நன்மைக்காகவே என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் மேலும் கூறியுள்ளார். (பி-2)

WORLD NEWS
உலக தரிசனம்

# பின்லேடனின் மகன் ஈரானில் இருக்கிறார்

(லண்டன்)

பயங்கரவாதி ஒஸாமா பின் லேடனின் மூத்த மகன் சாத்(23), ஈரானில் அல்கெய்டா பயங்கரவாதிகளுடன் தங்கி இருப்பதாகக் கூறப்படுகிறது.

பின்லேடனுக்கு பல மனைவிகள் உள்ளனர். அவர்கள் மூலமாக 23குழந்தைகள் உள்ளனர். அவர்களில் மூத்த மகன் சாத், ஆப்கானிஸ்தானில் தந்தையுடன் இருந்தார். 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி வீழ்ந்தவுடன்அங்கிருந்து அவர் தப்பிச்சென்றார்.

தற்போது அவர் ஈரானில் இருப்பதால், அங்கு அல்கெய்ட்டா பயங்கரவாத அமைப்பினரும் இருப்பர்.

இது கவலை அளிக்கும் விஷயமாகும் என்று அமெரிக்க உளவுத்துறையின் தலைவர் ஜோர்ஜ் டெனட் கூறியிருக்கிறார் என்று சண்டேரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (பி)



அமெரிக்க புலனாய்வு அமைப்பின் தலைமையகத்தில் புஷ் உரையாற்றுகிறார். தலைமை சட்டமா அதிபர் ஜோன் அஷ்க்ரொப் (இடது) புலனாய்வுப் பணிப்பாளர் ரொபர்ட் மியுல்லர் (வலது) அருகில் காணப்படுகின்றனர். (பி)

# சிம்பாப்வே அதிபர் முஹாபே கைது செய்யப்படுவாராம்

(லண்டன்)

பாரிஸில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள பிரஞ், ஆபிரிக்க உச்சிமாநாட்டிற்குச் செல்லவுள்ள சிம்பாப்வே ஜனாதிபதி ரொபேட் முஹாபேயைக் கைது செய்யப்போவதாக பிரிட்டன் மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதியொருவர் கூறியுள்ளார்.

மனித உரிமைகள் மீறலுக்காக ஸ்லோபேடன் மிலோஜ ஜலிற்றை சர்வதேச நீதிமன்றின் விசாரணைக்கு உட்படுத்த முடியுமானால், ஏன் ரொபேட் முஹாபேயை சட்டத்தின் முன் நிறுத்த முடியாதென பிரிட்டன் மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதியான பீட்டர் டஜ்ஜல் கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

ரொபேட் முஹாபேயைக் கைதுசெய்ய வேண்டும் என இவர் கூறியிருப்பது இது மூன்றாவது தடவையென்பது குறிப்பிடத்தக்கது. (பி)



போரினால் பாதிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பனி மழையில் சாலையில் நிற்கும் சிறுமி. அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் வீடு இன்றித் தவிக்கின்றனர்.

### மிகப்பெரிய தெர்மா மீட்டர் சீனா சாதனை

(பெய்ஜிங்)

பெருஞ்சுவரை அமைத்து வரலாற்றுச்சாதனை படைத்த சீனா, தற்போது மிகப்பெரிய தெர்மாமீட்டரை அமைத்துள்ளது.

இதன் உயரம் 139மீட்டர். தெற்கு சீனாவின் ஜியாங்சி மாநிலத்தில் இது அமைக்கப்பட்டுள்ளது.

2,41,000டாலர் (சுமார் 1கோடி ரூபாய்)செலவில் இது அமைக்கப்பட்டுள்ளது. இதன் ஸ்கேல் பகுதி ஆரஞ்சு நிறத்திலும் பாதரசம் உள்ள பகுதிசிவப்பு நிறத்திலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த தெர்மாமீட்டர் தினசரி மாலை 6.30 முதல் இரவு 11 மணி வரை செயல்படும். இதன் ஆயுட் காலம் அதிகபட்சம் 15 ஆண்டுகள் என்று ஜியாங்சி மாநில அதிகாரிகள் தெரிவித்தனர். (பி)

### ஆயுத உற்பத்திக்கு சதாம் தடை

(பக்தாத்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்வது அல்லது இறக்குமதி செய்வதை தடை செய்திருக்கின்றார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை மற்றும் அமெரிக்க பிரிட்டன் ஆகிய நாடுகளின் எச்சரிக்கையை அடுத்தே சதாம் ஹுசைன் இந்த தடையை விதித்திருக்கின்றார்.

இந்த தடையுத்தரவை அடுத்தே ஈராக்மீது போர் தொடுக்கும் அமெரிக்காவின் நிலைப்பாட்டில் தளர்வு ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (பி-9)

## பேரழிவு ஆயுதங்களை

# சதாம் பதுக்கி வைத்துள்ளார் என்பதில் சந்தேகமே இல்லை

## ஜோர்ஜ் டபிள்யு புஷ்

(வஷிங்டன்)

பேரழிவு தரும் ஆயுதங்களை சதாம் பதுக்கிவைத்துள்ளார். இதில் சந்தேகமே இல்லை என்று கூறினார் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்டபிள்யு புஷ்.

அமெரிக்கப் புலனாய்வு அமைப்பின் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை அதிபர் புஷ் பேசினார்.

அங்கு அவர் கூறியதாவது,

மிகவும் ஆபத்தானவர் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன். எனவே அவர் பதுக்கி வைத்துள்ள ஆயுதங்களைக்களைவதில் அமெரிக்கா மிக உறுதியுடன் உள்ளது.

பேரழிவு தரும் ஆயுதங்களைப் பதுக்கி வைத்துள்ளார் ஹுசைன். இதில் சந்தேகமே இல்லை. அவற்றை ஏற்கனவே அவர் பயன்படுத்தியுள்ளார். உலகை ஏமாற்றுவதே அவரது வழக்கம். இப்போதும் அதைத் தான் அவர் தொடர்ந்து செய்து வருகிறார். பயங்கரவாத அமைப்புடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது.

ஈராக் ஆயுதங்கள்தொடர்பாக ஐ.நா ஆயுத சோதனைக் குழு வெளியிட்ட அறிக்கையை மையமாக வைத்து ஐ.நா. பாதுகாப்பு மன்றம் விவாதம் நடத்தியுள்ளது.

இந்நிலையில் அதற்கு பதிலளிக்கும் விதமாக மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார் புஷ். பயங்கரவாதத் தாக்குதலை முறையடிக்க மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளையும் அவர் அங்கு விவரித்தார். (பி)

### சந்தேக நபர் கைது

(புதுடில்லி)

குஜராத்தில் கடந்த ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி இடம் பெற்ற கோத்ரா ரயில்படு கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட முக்கிய நபர் எனக் கருதப்படும் ஒருவர் பஞ்மஹால் மாவட்டத்தில் லுானாடாவி நகரில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (பி-2)

# ஆயுத கொள்வனவுசெய்ய தாய்வானுக்குவலியுறுத்து

(நியூயோர்க்)

நவீன ஆயுதங்களை உடனடியாக கொள்வனவு செய்யுமாறு தாய்வானை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களையும் பெருமளவு களஞ்சியப்படுத்துமாறு தாய்வானிற்கு அறிவித்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் தாக்குதல்களை எதிர் கொள்ளும் வகையிலேயே தாய்வானின் ஆயுத பலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாவும் இவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அமெரிக்காவின் ஆயுத உதவிகள் தாய்வானிற்கு தாராளமாக வழங்கப்பட வேண்டும் என்றும அமெரிக்க இராஜாங்க அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார். (பி-9)

# நோபல் பரிசு பெற்ற 12அறிஞர்கள் கடிதம்

(நியூயோர்க்)

ஐ.நா. அனுமதியின்றி ஈராக் மீது போர் தொடுக்கக் கூடாதெனக் கூறி நோபல் பரிசு பெற்ற 12அறிஞர்கள் அமெரிக்காவுக்குக் கடிதம் எழுதியுள்ளனர். அவர்களின் பெயர்விபரம் வருமாறு.

ஜோசப் ராபிட்பிளாட் (நோபல் அமைதிப்பரிசு 1995),அந்தோனி ஹெவிஷ் (பௌதிகம், 1974), ஆண்ட்ரு ஹக்ஸ்லி (மருத்துவம் 1963), பிரயன் ஜோசப்சன் (பௌதிகம், 1973), ஹரோல்டு குரொட்டோ(வேதியியல்,1996), பால்நர்ஸ் (மருத்துவம், 2001) ரிச்சர்டு ராபர்ட்ஸ் (மருத்துவம், 1993), பிரெடரிக் சாங்கர் (வேதியியல் 1958, 1980), ஜான்வானே (மருத்துவம் 1982), ஜான் வாக்கர் (வேதியியல் 1997), மவரிஸ் வில்கின்ஸ் (மருத்துவம் 1962),ஜேம்ஸ் கர்லீஸ்(பொருளாதாரம் 1996) (பி)

# தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு பொ.ஐ.மு-ஜே.வி.பி கூட்டுக்கு இல்லை

## சகவாழ்வுக்கான மன்றத் தலைவர் குமார் ரூபசிங்க

(கொழும்பு)

மீண்டும் தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில், சிறுபான்மையினின் வாக்குப் பலம் அற்ற நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி-மக்கள் விடுதலை முன்னணி கூட்டு வெற்றி பெற்றது.

வெற்றி வாய்ப்பு ஐக்கிய தேசிய முன்னணிக்கே உண்டு.

மக்கள் சமாதான முன்னணியின் சமஷ்டி தொடர்பான விளக்கக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய சகவாழ்வுக்கான மன்றத்தின் தலைவர் கலாநிதி குமார் ரூபசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குமார் ரூபசிங்க மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறும் நிலையில எதிரககடசி உறுப்பினர்கள் வேறும் பலரை ஆளும் கட்சிக்குள் உள்ளீர்ப்பது சிரமமானதாக இருக்காது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இவ்வாறு கட்சி தாவினால் ஜனாதிபதியின் பலம் குறைவடைவதுடன், பிரதமர் எண்ணுவது போன்ற இனப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வு காண முடியும் எனக் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெறுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகள் பெற வேண்டியது அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்திப் பேசினார்.

மேலும் பேசுகையில்,

மக்களே இறுதித்தீர்ப்பு வழங்க வேண்டியவர்களாக இருப்பதால் அரசின் சமாதானச் செயற்பாடுகளை உடனுக்குடன் அறிவிப்பதுடன் சமஷ்டி தொடர்பான விழிப்புணர்வுகள் மக்களிடையே ஏற்படுத்தப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்கள் ஐந்து தடவைகளைத் தாண்டியதில்லை.

எனினும் இம்முறை பேச்சுவார்த்தை யானது இருசாராரினதும் நம்பிக் கையை பலப்படுத்திய பின்னணியில் தொடர்வது தீர்வு குறித்த ஸ்திரத் தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

பல அரசாங்கங்களில் அங்கம் வகித்தவரான பிரதமர் தான் பெற்ற அனுபவங்களை முன்னுதாரணமாக்கி தவறுகளைத் திருத்தி இப்பேச்சு வார்த்தையை ஆரம்பித்திருப்பது முடிவு நல்லதாகவே அமையும் என்பதை உணர்த்துகிறது என்று குறிப்பிட்டார். (உ)

## யாழ். குடாநாட்டில்

# 10 வீதமான மிதிவெடிகளே புலிகளால் புதைக்கப்பட்டவை

## ஹலோரஸ்ட் செயற்றிட்ட முகாமையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளில் 90 சதவீதமானவை படையினராலேயே புதைக்கப்பட்டுள்ளன.

கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்ற போரின் போது யாழ். 'குடாநாட்டில் அரசு-புலிகளால்' புதைக்கப்பட்டுள்ள சுமார் 4 இலட்சம் வரையிலான மிதிவெடிகளை அகற்ற 4 ஆண்டுகள் வரை செல்லலாம் என்று தற்போது யாழ்ப்பாணத்தில் மனிதாபிமான மிதிவெடிகள் செயலிழக்கும் பணியில் தீவரமாக ஈடுபட்டு வரும் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஹலோரஸ்ட் நிறுவனத்தின் செயற்றிட்ட முகாமையாளர் சைமன் போட்டர் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2002 ஜூன் மாதம் யாழ். குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட எமது பணிகளின் ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த இடங்கள் பற்றிய தள ஆய்வுகளை இராணுவ மற்றும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மேற்கொள்ளுதல் அமைந்திருந்தது.

அதன்போது 450ற்கும் மேற்பட்ட அபாயம் விளைவிக்கும் உபகரணங்களையும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மிதிவெடிகளையும் அழிக்க முடிந்தது.

48 பணியாளர்களின் கடின உழைப்புடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் தற்போது மிதிவெடி அகற்றும் பணி இடம்பெறுகின்றது.

இதுவரை ஹலோரஸ்ட் நிறுவனம் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மிதிவெடிகள் அபாயம் என்னும் அறிவித்தல் பலகைகளை நாட்டியுள்ளது.

இந்த மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்தப் பாரிய இயந்திரங்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளதுடன் இப்பணியில் யுத்தங்கள் இடம்பெற்ற கம்போடியா, அங்கோலா, ஆப்கானிஸ்தான், மொஸாம்பிக் உட்பட பல்வேறு நாடுகளில் பணியாற்றிய அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார். (உ)

# புத்த விகாரை அமைப்பைக் கண்டித்து பொது அமைப்புகள் போர்க்கொடி

## வலி-வடக்கு-தெற்கில் நாளை கண்டனப் பேரணி

(ஏழாலை)

கந்தரோடையில் புத்த விகாரை அமைக்கும் முயற்சியைக் கண்டித்து நாளை மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

கந்தரோடை புதைபொருள் ஆராய்ச்சி நிலையப் பகுதியில் புத்த விகாரை அமைக்கும் துரித நடவடிக்கைகள் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்றன.

வரலாற்றைத் திரிவு படுத்த முனையும் இவ்வாறான முயற்சியைக் கைவிடுமாறு பல தடவைகள் இப்பகுதிப் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்து வந்த போதிலும் அதற்குச் செவி சாய்க்கப்படவில்லை.

இதனையடுத்தே, வலிகாமம் வடக்கு- தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை மாபெரும் கண்டனப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலை 9.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்றலில் ஆரம்பமாகும் இக்கண்டனப் பேரணி, வலிதெற்கு பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து அங்கு கண்டனப் பொதுக்கூட்டமும் மகஜர் கையளிப்பும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இக்கண்டனப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து அன்றைய தினம் வலி-வடக்கு, தெற்குப் பிரதேசத்தில் கடையடைப்புப் போராட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-12)

## கண்டனப் பேரணிக்கு ஆதரவு திரட்டல்

(ஏழாலை)

கந்தரோடை புதைபொருள் ஆராய்ச்சி நிலையப் பகுதியில் புத்தர்சிலை ஒன்று நிறுவப்பட்டு விகாரை அமைக்கும் நடவடிக்கையினைக் கண்டித்து நாளை நடைபெறவுள்ள கண்டனப் பேரணியில் பொது மக்களை அணிதிரளுமாறு கோரி வலிகாமம் வடக்கு,தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது(உ-12)

## கச்சதீவு ஆலயத்தில் வருடாந்த விழா

(நெடுந்தீவு)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த விழா எதிர்வரும் மார்ச் மாதம் 8,9,10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவை முன்னிட்டு அங்குள்ள நிலைமைகளை ஆராய நெடுந்தீவு பிரதேசசெயலர் க.பேரானந்தன், பங்குத்தந்தை எஸ்.ஜெபநேசரத்தினம் ஆகியோர் தலைமையில் குழு ஒன்று நாளை கச்சதீவு செல்லவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-126)

## யாழ்.வைத்தியசாலையில் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில், யாழ். பல்கலைக்கழக 1ஆம் வருட மருத்துவபீட மாணவர்கள் நேற்று முன்தினம் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

இச்சிரமதானப்பணியில் பங்கு கொண்ட நூற்றுக் கணக்கான மாணவர்களில் தென்னிலங்கையில் இருந்து வந்து கல்விகற்கும் சிங்கள மாணவர்களும் அடங்குவர்.

இவர்கள் வைத்தியசாலையின் உட்புற சூழலை பூரணமாக சிரமதானம் செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (க-4)



யாழ். போதனா வைத்தியசாலையில், யாழ். மாவட்ட மருத்துவபீட மாணவர்களால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சிரமதானத்தின் போது எடுக்கப்பட்ட படம். படம். க. பவன்

## அரசின் அனுமதி இன்றி

### பெறுமதி வாய்ந்த பொருட்கள்

# வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல தடை

(கொழும்பு)

அகழ்வாராய்ச்சி அடிப்படையில் பெறுமதி வாய்ந்த எந்தவொரு பொருளும் அரசாங்கத்தின் அனுமதி இன்றி வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்ல முடியாது என சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

வட பகுதியில் உள்ள பௌத்த வழிபாட்டுத்தலங்களை இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைப்பது தொடர்பாக ஆராயும் வகையில் நேற்று முன்தினம் மகாநாயக்கரைச் சந்தித்த போதே அமைச்சர் லொக்குகே இதனைத் தெரிவித்தார்.

அவ்வாறு அரச அனுமதியின்றி கொண்டு செல்லப்படுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.(க-10)

## ஒப்பந்த ஒருவருட பூர்த்தியன்று

# ஒரு இலட்சம் தேசியக் கொடிகளை பறக்க விடுவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒரு வருடம் முடிந்துள்ளதைக் குறித்து பெப்ரவரி 22ஆம் திகதி நாடு முழுவதிலும் ஒரு லட்சம் தேசியக் கொடிகள் பறக்க விடப்படவுள்ளன.

வீடுகள், வாகனங்கள், கடைகள், நிறுவனங்கள் என்பவற்றில் இவை பறக்க விடப்படும்.

மக்கள் சமாதான முன்னணி இதனை ஏற்பாடு செய்துள்ளது. அத்துடன், போர் நிறுத்த ஒப்பந்தத்தை விளக்கியும், வடக்கு-கிழக்கின் இன்றைய நிலையைத் தெளிவுபடுத்தியும் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகிக்க இருப்பதாக முன்னணியின் இணைச் செயலாளர் மில்ரன் பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமையன்று கொழும்பு கோட்டை ரயில்நிலையம் முன்பாக இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாட்டின் பிரதான நகரங்களில் பதாதைகளும் தொங்கவிடப்படுவதுடன் வானொலி நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, அதேதினம் வீடுகளில் கறுப்புக்கொடிகளை பறக்க விடும் இயக்கமொன்று அநுரா பண்டாரநாயக்க தலைமையில் ஈடுபட்டு வருகின்றது. (உ)

# ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினருக்கு நாளாந்தம் மேலதிக கொடுப்பனவு

## சந்திரானந்த டி சில்வா அறிக்கைக்கு முரண்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்ககுமாரதுங்கவின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு நாளாந்தம் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இது பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் சந்திரானந்த டி சில்வா விடுத்த சுற்றறிக்கைக்கு முரணானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நாளாந்தம் எதுவித மேலதிக கொடுப்பனவுகளும் இன்றி 10 மணித்தியாலங்கள் கடமையில் ஈடுபட வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்படுகின்றன.

1997ஆம் ஆண்டு விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தோருக்கு வழங்கப்பட வேண்டிய மேலதிக கொடுப்பனவுகள் பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

இதன்படி தமது வழமையான சேவைகளுக்கு அப்பால் கடமைகளில் ஈடுபட்டால் மாத்திரமே மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் இது தற்போது கடைப்பிடிக்கப்படுவதில்லை.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கும் நாளாந்தம் சம்பளமாக 230 ரூபாவாக வழங்கப்படுகிறது. இவர்கள் அனைவரதும் கடமை நேரம் 6 மணித்தியாலங்கள் மாத்திரமே.

இதனால் பாதிக்கப்பட்ட ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இக்கொடுப்பனவுகளையும், விசேட சலுகைகளையும் வழங்கியது யார் என கேள்வி பல தரப்பினராலும் எழுப்பப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-8)

## கல்குடா கல்வி வலயத்தில்

# 540 ஆசிரியர் வெற்றிடங்கள்

### மேலதிக வலய கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கல்குடா கல்வி வலயத்தில் 540 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதாக மேலதிக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

92 பாடசாலை கொண்ட இவ்வலயத்தில் 247 ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ளது.

இதனால் ஆரம்பப்பிரிவுகளின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆங்கிலப் பாடத்துக்கு 116 ஆசிரியர்களும், கணிதத்துறைக்கு 32 ஆசிரியர்களும், விஞ்ஞானப்பிரிவுக்கு 23 ஆசிரியர்களும் இக்கல்வி வலயத்துக்கு தேவையாக உள்ளனர் என வலயக் கல்விப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-8)

முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர் —குறள்—

# வலம்புரி

## ஒப்புக் கொண்டால் போதுமா?

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவச் சிப்பாய்கள் ஊடுருவியமையை யுத்த நிறுத்த மீறல் என இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரத்தின ஒப்புக் கொணடுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கடடுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் இருக்கக் கூடிய சூனியப் பிரதேசத்தையும் கடந்து மூன்று இராணுவச் சிப்பாய்கள் கிளாலிப் பகுதியில் உள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்துள்ளார்களெனில் அதனை வெறுமனே யுத்த நிறுத்த மீறல் என்ற ஒப்புக் கொள்ளலுடன் விட்டுவிட முடியாது, யுத்தநிறுத்த உடனபடிக்கை அமுலில் இருக்கும் போது இராணுவச் சிப்பாய்கள் எதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றார்கள் என்பது கண்டறியப் பட வேண்டும்.

அதாவது,புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவச் சிப்பாய்கள் ஏன் நுழைந்தார்கள்,அவர்கள் புலிகளின் பகுதிக்குள் நுழைந்த விடயம் இராணுவ அதிகாரிகளுக்குத் தெரியாதா? போன்ற கேள்விகளுக்கு சரியான விடை காணப் பட வேண்டும்.

ஏனெனில்,ஒரு புறத்தில் சமாதானப் பேச்சுகள் நடைபெறுக் கொண்டிருக்கும் போது மறு புறத்தில் இலங்கை இராணுவம் புலிகளின் தரிப்பிடங்களை வேவுபார்க்கும் நடவடிககையில் ஈடுபட்டுள்ளதென தற்போது தெளிவாகியுள்ளது.

அண்மையில் அளவெட்டியில் வீழ்ந்து நொருங்கிய தானியங்கி வேவு விமானம, கடந்த 15ம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கிளாலிப் பகுதிக்குள் இராணுவச் சிப்பாயகள் நுழைந்தமையெல்லாம் இராணுவத்தின் வேவு நடவடிக்கையில் சிலவாகும் எனவே, விடுதலைப் புலிகள் நம்பிக்கையோடு சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்க, இலங்கைப் படைகள் யுத்த நரித்தந்திரத்தில் செயற்படுவது உண்மையான சமாதானம் ஏற்படுவதை தடுத்து விடும்.

இதனை விடுதலைப் புலிகளின வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார். அவரின் கருத்தின் பிரகாரம், சூனியப் பிரதேசத்தைக் கடந்து புலிகளின கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவச் சிப்பாய்கள் மூவர் நுழைந்தமை மிக மோசமான யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறலாகும்.

இத்தகைய சம்பவங்கள் சமாதானத்தின்பால் புலிகளுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி விடும். அத்தகையதொரு நம்பிக்கையீனம் ஏற்படுமாக இருந்தால் அது சமாதான முயற்சியை பாதிக்கும். கேணல் தீபனின் கருத்தில் இருக்கக் கூடிய யதார்த்தங்களை இலங்கை அரசும், சிங்களப் படைகளும் மிக நிதானமாகச சிந்திக்க வேண்டும்.

சமாதான முயர்சிகளை குழப்பும் நடவடிக்கையில் தீய சக்திகள் ஈடுபடுவதைத் தடுப்பதும் கண்காணிப்பதும் அரசினதும் படைத் தளபதிகளதும தலையாய கடமையாகும். வெறுமனே ஒப்பந்த மீறலென ஏற்றுக் கொள்வதன் மூலம் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து

# தகவல் திணைக்கள யாழ். அலுவலகம் முன்பாக நேற்று அடையாள மறியல் போர்

(தென்மராட்சி)

நெல்லியடி, மட்டக்களப்பு, மானிப்பாய் பகுதிகளில் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் படையினரால் தாக்கப் பட்டமையைக் கண்டித்து நேற்றைய தினம் யாழ். அரச செயலகத்தில் இயங்குகின்ற தகவல் திணைக்களம் முன்பாக குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் தமது வாய்களைக் கறுப்புத் துணிகளால் கட்டி அடையாள மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போராட்டம் மூன்று மணிநேரம் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வடக்கு முஸ்லிம்கள் அமைப்பு, புதிய ஜனநாயகக்கட்சி மற்றும் சலன சித்திரம் ஆகிய அமைப்புகள் தமது ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் வழங்கியிருந்தன.

யாழ். மாவட்ட தமிழர் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அ. விநாயகமூர்த்தி,பொன்னம்பலம் கஜேந்திரகுமார்,எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் அங்கு வருகை தந்து தார்மீக ஆதரவை வெளிப் படுத்தினர்.அத்துடன், நெல்லியடி, மட்டகளப்பு, மானிப்பாய் சம்பவங்களின் போது தமிழ்ப் பத்திரிகையாளர்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் உரையாடி தாக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும்படி கோருவோம் என அவர்கள் உறுதியளித்திருந்தனர்.

இதேவேளை, இப்போராட்டம் இடம்பெற்ற சம்பவம் யாழ்.தகவல் திணைக்கள அலுவலகம் முன்பாக கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு இருந்தன.

இவ் அடையாள மறியல் போராட்டத்தில் பங்கு கொண்டிருந்தவர்கள் பின்வரும் வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளைத் தாங்கியிருந்தனர்.

*தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே! தமிழ்ப்பத்திரிகையாளர்கள் தாக்கப்படும் போது ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்.

*இராணுவமே பத்திரிகையாளர்களை மதிக்கக் கற்றுக்கொள்.

*ஸ்ரீலங்கா ஊடகத்துறை அமைச்சரே நீயும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்குத் துணையா?

இச்சுலோகங்கள் தமிழ் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்டிருந்தன.

மேலும், யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தினால் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பார்க்கீர் மார்க்காருக்கு முகவரியிடப்பட்ட மகஜரினை சங்கத்தின் தலைவர் வே. தவச்செல்வம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதனிடம் கையளித்தார். அதனைத் தொடர்ந்து, கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அங்கு உரையாற்றும் போது,

இப்போராட்டம் எமது சமூகம் சார்ந்த போராட்டமாகும். இதில் இருந்து நாம் விலகி விட முடியாது. பத்திரிகையாளர் தாக்கப்படும் போது நாம் கைகட்டிக் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. மானிப்பாய், நெல்லியடி, மட்டக்களப்பு சம்பவங்களின் போது தாக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்க வேணடும் என்றார்.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில், சலன சித்திர அமைப்பைச் சேர்ந்த க.தேவதாசன் ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இப் போராட்டதினை முடித்து வைத்து உரையாற்றும் போது,

எமது பத்திரிகையாளர்களுக்கு சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் பாதுகாப்பு வழங்க வேண்டும். எமது மண்ணில் நடக்கும் அனைத்து அடக்கு முறைகளுக்கும் எதிராக நாம் போராட வேண்டும். பத்திரிகையாளர்கள் மீது மேற்கொள்ளப் படும் தாக்கு தல்களை அரசு நிறுத்தாவிட்டால் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வீதியில் இறங்கிப் போராட வேண்டிய நிலை உருவாகும் என எச்சரித்தார்.இது இவ்விதமிருக்க ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பார்க்கீர் மார்க்காருக்கு அரச அதிபர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மீது எத்தகைய வனமுறை கட்டவிழ்த்து விடப் பட்டதோ அதே பாணியில் உங்களது ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலும் தொடர்வது வேதனைக்குரியதாகும்.

வடக்கு-கிழக்கு பகுதியில் படைத் தரப்பினர் மேற்கொண்டு வருகின்ற தாக்குதல் நடவடிக்கைகளை கண்டும் காணாமல் இருப்பதுடன் தமிழ் பத்திரிகையாளர்கள் தானே என்ற மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்வது மிகுந்த வேதனையளிக்கின்றது. எனவே தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன் சுதந்திரமான செயற்பாட்டிற்கு தடையாக இருப்போர் மீது உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற அனைத்து அரச உதவிகளும் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (உ-77,43,4,7,44)

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியாக 2003 பெப்ரவரி 21 அன்று சகல பாடசாலைகளிலும் சமாதான தினத்தைக் கொண்டாட கல்வி அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது.

இது தொடர்பாக அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி.ப. 2 மணிக்கு கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் யாழ். வலய அதிபர்களை இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் கம்பனிகள் சட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றை இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தவுள்ளது. இக் கருத்தரங்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகல வர்த்தகர்களும் கலந்து கொண்டு அது பற்றிய விளக்கத்தையும், பங்குதாரர்களுக்குரிய உரிமைகள், சலுகைகள் போன்ற விபரங்களையும் அறிந்து கொள்ளலாம் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார். (உ)

## 13 ஆண்டுகளின் பின் இயங்கும் பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் கடந்த 13 ஆண்டுகளாக மூடப் பட்டிருந்த வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த இரு பாடசாலைகள் கடந்த 14ம் திகதி தொடக்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன.

ஏழாலை வடக்கு அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, சிறுவிளான் கனக சபை வித்தியாலயம் ஆகியனவே மீள இயங்க ஆரம்பித்துள்ளன.

இப பாடசாலைகளுக்கு தற்போது தற்காலிக அதிபர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். (உ)

வவுனியா கல்வியியல்

# கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டனர்

(வவுனியா)

வவுனியா கல்வியில் கல்லூரி மாணவர்களினால் மேற்கொள்ளப் பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் தலையீட்டினையடுத்து நேற்று நண் பகல் அளவில் கைவிடப்பட்டது.

பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மாணவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்வதாக உறுதியளித்ததனையடுத்தே இப் போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த ஒன்றரை மாதத்திற்கு முன் இடம் பெற்ற பகிடிவதையுடன் சமபந்தப்பட்டதாக கூறப்படும் 4 மாணவர்கள் வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதியினால் இடைநிறுத்தப்பட்டிருந்தமையினை கண்டித்து இப் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# வல்லை ஒன்றியக் கிளை அங்குரார்ப்பணம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறையில் இருந்து இடம் பெயர்ந்த மக்களால் உருவாக்கப்பட்டு பிரித்தானியா, டென்மார்க் நாடுகளில் இயங்கிவரும் வல்லை ஒன்றியக் கிளை வல்வெட்டித்துறையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் இளைப்பாறிய அதிபர் எஸ்.சத்தியமூர்த்தி தலைமையில் வல்வெட்டித்துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அண்மையில் நடை பெற்றது. இவ் வல்லை ஒன்றியக் கிளைக்கு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைதத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள்,பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத் தலைவர் என்.சிவஞான சுந்தரம் உட்பட 21உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இடம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் வல்வெட்டித்துறை மாணவர்கள் நிதிசேகரித்து வல்லை ஒன்றியக் கிளை மூலம் வறிய இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கி தொழிற்சாலைகளை அமைப்பதற்கும்,மீன் பிடித் தொழிலை ஊக்குவிப்பதற்கும்,பாடசாலைகள், நூலகங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-52)

# புங்குடுதீவில் மீளக்குடியமர பொது மக்கள் தயக்கம்

(தென்மராட்சி)

புங்குடுதீவில் தற்போது மீளக் குடியமர்ந்துள்ள சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் குடிநீர் மற்றும் போக்குவரத்து மருத்துவ வசதிகள் முழுமையாகக் கிடைக்காத நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளன.

இங்கு போதிய அடிப்படை வசதிகள் இன்மையால் இடம் பெயர்ந்த நிலையிலுள்ள குடும்பங்கள் மீள் குடியமரத் தயக்கம் காட்டிவருகிறதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக பேராசிரியர் க.சிவசாமி,பேராசிரியர் க.குகபாலன் ஆகியோர் உள்ளிட்ட குழுவொன்று நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவைச் சந்தித்து புங்குடுதீவில் மேற்கொள்ளப்படவேண்டிய செயல் திட்டங்கள் பற்றிக் கலந்துரையாடியுள்ளது.

புங்குடுதீவு உட்பட ஏனைய தீவுப் பகுதிகளில் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற் கொண்டு அப் பகுதி மக்களுக்கு உதவுவதற்கு தன்னாலான உதவிகளை வழங்குவேன் என்று மாவை எம்.பி உறுதி யளித்துள்ளார். (உ-77)

# அந்நிய செலாவணி கட்டுப்பாட்டு சட்டம் நீக்கப்படும்

(கொழும்பு)

அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் உள்வருவது தடைப்பட்டுள்ளதால் நடைமுறையில் உள்ள அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் நீக்கப்படவுள்ளது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையின் கீழ் இயங்கும் பொருளாதார மீள் அடைவுக் குழுவிற்கு இது பற்றி பிரதமர் அறிவுரை வழங்கியுள்ளார்.

இச்சட்டம் நீக்கப்பட்டு தாராளமயப்படுத்தல் மேற்கொள்ளவதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இங்கு வரவழைக்க முடியும்.

இதனால் நாட்டின் பொருளாதார வளம் அதிகரிக்கும் எனவும் எதிர் பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டு நாணய மாற்றுச் சட்டத்தைத் தளர்த்தி தாராள மயப் படுத்தலை மேற்கொள்வதற்கான திருத்தச் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-3)

## தினசரி தியானம்

### வெற்றியும் தோல்வியும்

முனைப்பான செயல்பாடுகளுடைய வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள். எப்போதும் அமைதியான மனத்துடன் இருங்கள். உங்கள் ஆன்மீக வாழ்வில் ஏற்படும் கஷ்டங்கள் மற்றும் தோல்விகளைக் கண்டு அஞ்சாதீர்கள். இக்கஷ்டங்கள் உங்கள் மன உறுதியை வளர்ப்பனவாகும். தோல்விகள் வெற்றிக்கு அமைந்த படிக்கட்டுகள் ஆகும். உங்களுடைய நுண்ணறிவு, மதிநுட்பம், நுண்மாண் நுழைபுலம் மற்றும் பகுத்தறிவு ஆகியவற்றைப் பயன்படுத்தி கஷ்டங்களை ஒவ்வொன்றாக வெற்றி கொள்ள முடியும்.

சுவாமி சிவானந்தர்

# அமைச்சர் ஜயலத்தின் அலுவலகம் யாழிலும்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவின் அலுவலகம் ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்திலும் திறக்கப்படவுள்ளது.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் வந்தவேளை அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவே வெளியிட்டார்.

வடக்குத் தெற்கு உறவுப் பால நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 150 தென்னிலங்கையரை கடந்த சனியன்று தலைமையேற்று அழைத்து வந்த அமைச்சர் யாழ். றான் அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்றை நடத்திய வேளை இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீளக் குடியமர்ந்த மக்களின் தேவைகளை உடனுக்குடன் கவனிக்கும் வகையிலும் கட்டட நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்தும் வகையிலும் இந்த அலுவலகம் எதிர்வரும் 6மாத காலப் பகுதிக்குள் திறக்கப் படும் என்று குறிப்பிட்டார். (உ-4)

# மக்களின் வேண்டுகோளை அடுத்தே நூலக விடயத்தில் தலையிட்டோம்

## அரசியல் துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றே நாம் யாழ் பொது நூலக விடயத்தில் தலையிட்டோம் என்று விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்துள்ளார்.

புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச் சந்திப்பிலேயே துணைப் பொறுப்பாளர் செம்மணன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ் மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதே எமது கடமை. இந் நிலையில் மக்களும், மக்கள் பிரதிநிதிகளான பொதுஜன அமைப்புக்களும் யாழ் பொது நூலக விடயத்தில் தலையிட்டு சுமுகமான தீர்வை ஏற்படுத்து மாறு கோரினர். மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டே நாம் யாழ்.மாநகர முதல்வர் எஸ். கந்தையனுடன் நூலகம் தொடர்பாக பேசினோம்.

யாழ்.நூலக திறப்பு விழா தொடர்பான பிரச்சினையையும் எதிர்கால சிக்கல்கள் குறித்தும் முதல்வருக்கு நாம் விளக்கிக் கூறினோம் அதனை முதல்வர் தன்னை மிரட்டியதாக தவறாக புரிந்து கொண்டுள்ளார். உண்மையில் நானும் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், நூலகத் திறப்பு விழாவினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்தே விளக்கினோம் என்று துணைப் பொறுப்பாளர் செம்மணன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

### மாசி மாதக் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இன்று நடைபெறவிருந்த மாசி மாதத்திற்கான விவசாயக் குழுக் கூட்டமும்; ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 20ம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (ந)

### சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று

(ஆனைக்கோட்டை)

வேலணைத் துரைச்சுவாமி மத்திய மகாவித்தியால மாணவ தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும வைபவம் இன்று பாடசாலை அதிபர் ப.அருணகிரிநாதன் தலைமையில் காலை 10 மணிக்கு பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (ந-201)

## ஒழுங்கற்று செயற்பட்டால் கூட்டமைப்பில் இருந்து ரெலோ வெளியேறும்

### ஸ்ரீகாந்தா எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட நோக்கத்திற்காக ஒழுங்கான முறையில் செயற்படாது போனால் அதிலிருந்து வெளியேறுவது குறித்து தீர்மானம் எடுக்க வேண்டிய நிலை ஏற்படுமென ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா எச்சரித்துள்ளார்.

கொழும்பு பம்பலப்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தமிழர் தேசிய பணிக் குழுவின் ஏற்பாட்டில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. இக் கருத்தரங்கில் உரையாற்றிய கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைக்கால நடவடிக்கைகள் குறித்து விபரம் வெளியிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஷ் அணியின் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி செயலாளர் நல்லையா குமரகுருபரன் ஆகியோரும் கூட்டமைப்பின் செயற்பாடுகள் குறித்து குற்றஞ் சாட்டியுள்ளனர். (வ)

பிரதேசசபை-பொ.வைரமுத்து; வலி.தெற்கு மேற்கு பிரதேச சபை-பி.விக்டர்; வலி.தெற்கு பிரதேச சபை-இராசா தணிகாசலம்; வேலணை பிரதேச சபை-எஸ். சண்முகராசா; பருத்தித்துறை பிரதேச சபை-அ.ந.நடராசா; பச்சிலைப்பள்ளி பிரதேச சபை-இ.து.சிவராசா. (வ-77)

### அழுகிய நிலையில்...

இதேவேளை வவுனியா மன்னார் வீதியில் நெலுக்குளத்தில் டொல்பின் ரக வாகனம் ஒன்று அநாதரவாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள மோட்டார் வாகன பதிவு திணைக்களத்தில் பெற்ற தகவலுடன் கொழும்பு வத்தளையைச் சேர்ந்த சுப்பையா என்பவரின் மனைவியையும், அவரது பிள்ளைகளையும் வவுனியாவுக்கு அழைத்து வந்து சடலத்தைக் காட்டியபோது அழுகிய நிலையில் காணப்பட்ட சடலம் தனது கணவரான சுப்பையா (வயது 43)வினுடையது என்று அவரது மனைவி அடையாளம் காட்டினார். அடையாளம் காணப்பட்டதையடுத்து இம் மர்மமரணம் தொடர்பாக வவுனியாப் பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நெலுக்குளத்தில் அநாதரவாகக கண்டுபிடிக்கப்பட்ட டொல்பின் ரக வாகனம் வவுனியா பொலிஸ் திணைக்களத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதுடன் சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (வ)

## 23ம் திகதி நல்லூர் முன்றலில் ஆயிரம் தீபங்கள் ஏற்றப்படும்

(கொழும்பு)

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலய சூழலில் ஆயிரம் தீபங்கள் ஏற்றி வைப்பதற்காக தென்னிலங்கையில் இருந்து 100 பிக்குகள் யாழ்ப் பாணம் வரவுள்ளனர்.

இதேவேளை 22ம் திகதி சனிக்கிழமை அரசு-புலிகள் உடன்படிக்கையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு சமய வழிபாட்டு நிகழ்ச்சிகளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இந்து ஆலயங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த ஏற்பாடுகளின்படி மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களில் 22ம் திகதி சனிக்கிழமை மாலை மணியோசை எழுப்பி விஷேட பூசைகள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### புனர்வாழ்வு...

புனரமைப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

அதனை விரைவுபடுத்தி மக்களுக்குப் புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சேவைகளை வழங்குவதற்கு அமைச்சின் உப அலுவலகம் அவசியமாகவுள்ளது.

இந்நிலையில் உப அலுவலகத்தைத் திறந்து மக்கள் பணிகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்-சிங்கள மக்களிடையே புரிந்துணர்வையும் சகோதரத்துவத்தையும் வளர்க்கும் முகமாக வடக்குத் தெற்கு உறவுப்பால நிகழ்வுகளை ஒழுங்கமைத்து செயற்படுத்தி வருகின்றோம்

தமிழ் மக்கள் சிங்கள மக்கள் மீது அன்பாக இருப்பதுடன் அவர்களை நேசிக்கின்றார்கள் என்பதை தென்னிலங்கைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கிலும் போரினால் வடபகுதியில் ஏற்பட்டுள்ள பாரிய அழிவுகளை நேரில் சிங்கள மக்கள் பார்வையிட வேண்டும் என்பதற்காகவும் தென்னிலங்கை சிங்களச் சகோதரர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்திருக்கிறேன் என்றும் அமைச்சர் ஜயலத் மேலும் கூறினார். (இ-5)

### கலைக்கப்பட்ட...

யாழ்ப்பாணம் மாநகரசபை-இ.இராமலிங்கம்; சாவகச்சேரி நகரசபை-மு.செ.சரவணபவன்; பருத்தித்துறை நகரசபை-ந.சிவபாலதர்மகுலசிங்கம்; வல்வெட்டித்துறை நகரசபை-அ.மே.ஜோசப்; நெடுந்தீவுப் பிரதேசசபை-ச.பொ.தில்லைநாதன்; ஊர்காவற்றுறை பிரதேச சபை-கு.கணேசலிங்கம்; நல்லூர் பிரதேசசபை-செ.செல்வரத்தினம்; வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை-சி.பசுபதி; வலி.மேற்கு பிரதேச சபை திருமதி கா.சிவானந்தராஜா; வலி.கிழக்கு பிரதேச சபை-கே.வெங்கடாசலம்; வலி.வடக்கு

### வடக்குக்.....

ளர்கள்,பணியாளர்கள் மற்றும் ஆலயங்கள்,தேவாலயங்களின் மதகுருமார் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் தமது அலுவலகங்களுக்கு வெளியில் செல்லும் பொது மக்கள் அனைவரும் தங்கள் மேலங்கியில் கறுப்புப் பட்டியை அணிந்து செல்லுமாறும் அதே வேளை வாகனங்களில் கறுப்புக். கொடிகளை பறக்கவிடுமாறும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறோம். கடந்த ஒரு வருடகாலமாக விடுதலைப் புலிகள் பொறுமை காத்ததினால் இந்தச் சமாதானம் இன்னும் உயிர்வாழ்கிறது. இது தொடர வேண்டுமானால் ஆயுதப் படையினரின் யுத்த நிறுத்த மீறல்களை நாம் எதிர்ப்பதைத் தவிர வேறுவழியில்லை.

மண்டும் மட்டக்களப்பில நடந்தது போன்றோ நெல்லியடியில நடந்தது போன்றோ அல்லது மானிப்பாயில் நெடுந்தீவு கடற்பரப்பில்,கிளாலியில் நடந்தது போன்றோ யுத்த நிறுத்த மீறல்கள் நடைபெறக் கூடாது என்பதே நாட்டு மக்களின் பெருவிருப்பமாகும்.

அதனால் நாளை புதன்கிழமை நடைபெறும் கறுப்புப்பட்டி அணிந்து செல்லும் போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் முழுமையாக பங்களிப்புச செய்யுமாறு வேண்டுவதுடன் மாவட்டத்தில் உள்ள அனைத்து அமைப்புகளும் தங்கள் தங்கள் பகுதியில் இதற்கான முழுவீச்சுடன் செயற்படுமாறும் யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஈ)

### அனுருத்த...

வழங்குவதற்கு பயிற்சி பெற்ற இராணுவ உத்தியோகத்தர்கள் இருந்த போதும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் பாதுகாப்புக்கு இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களே ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

2001ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையின் பாதுகாப்பை பலப்படுத்த நான் உத்தரவிடவில்லை.

ரத்வத்தையின் அந்தரங்கச் செயலாளர் பிரிகேடியர் நிலநதெனிய நவம்பர் மாதம் 28ம் திகதி என்னுடன் தொடர்பு கொண்டு ரத்வத்தைக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை மேலும் பலப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.அதன் பிரகாரம் அப்போது யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய லெப்டினன் விஜயரத்தின ரத்வத்தையின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

மத்திய பிராந்திய பிரிகேடியர் தம்மிக்க,லெப்டினன் விஜயரத்தின தலைமையிலான குழுவினருக்கு தேர்தல் காலத்தில் தேவையற்ற நடவடிக்கைளில் ஈடுபட வேண்டாம் என்றும் பணித்திருந்தேன்.

தேர்தல் காலத்தில் பிரிகேடியர் தம்மிக்க விடுத்த பணிப்பின் பேரில் லீவு நாட்களில் கடமையில் ஈடுபடுவதற்கு லெப்டினன் விஜயரத்தினாவுக்கும் ஏனைய சிலருக்கும் அனுமதி வழங்கியிருந்தேன்.அமைச்சர் ஜெனரல் ரத்வத்தைக்கு விடுதலைப் புலிகள் கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்தமையால் அவரது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது என்றும் லயனல் பலகல்ல தனது சாட்சியத்தில் தெரிவித்தார். (ம)


## புதிய உயர் கல்லூரி

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ம் பரிசு-3551

2ம் பரிசு-5216

3ம் பரிசு-1603

ஆறுதல் பரிசுகள்

4359,1464,3484,1496,4896,0178,3762,0852,4436,5084

09.03.2003 முன்னர்வரும் சனி,ஞாயிறு தினங்களில் மட்டும் தமக்குரிய பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

பட்டப் படிப்பு மாணவர் ஒன்றியம்
புதிய உயர் கல்லூரி

(6546)

## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள் பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரசசினையா? காதல் பிரச்சினைய்ா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

மணிசாமி P.T.R

பாண்டீஸ்வரி அம்பாள் அம்மா

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி,

இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4.00 மணிவரை.

[C/5522]

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### உதவி ஆசிரியர்கள்-ஆண்கள் (இரவுக் கடமை)

தகைமை:-
கல்வி: க.பொ.த உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி, தமிழ்,ஆங்கிலம்,சிங்களம் ஆகிய மொழிகளில் ஆழ்ந்த புலமை. (பத்திரிகைத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)
வயது: 30வயதுக்கும் 55வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

### அலுவலகச் செய்தியாளர்கள்:-ஆண்கள் (இரவுக்கடமை)

தகைமை:-
கல்வி: க.பொ.த உயர் தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி, தமிழில் ஆழ்ந்த புலமை.
வயது: 24வயதுக்கும் 50வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

### விற்பனை முகாமையாளர்கள்

தகைமை:-
கல்வி: க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி,
வயது: 23வயதுக்கும் 40வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.
வெளிக்களத்தில் பணியாற்றக் கூடிய உடல் ஆரோக்கியம்.

மேற்படி பதவிகளுக்குத் தகுதியானவர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவிகளைக் குறிப்பிட்டு முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, விவாக நிலை, தே.அ.அ.இலக்கம், கல்வித்தகைமை, தங்களைப்பற்றி விசாரித்தறியக் கூடிய பிரமுகர்கள் இருவரின் பெயர் என்பன அடங்கலாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

ஆளணி முகாமையாளர்,
''வலம்புரி''
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு 24-02-2003க்கு முன்னதாக தபாலிலோ அன்றி நேரிலோ அனுப்பி வைக்கவும்.

-ஆளணி முகாமையாளர்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.